


786/92

# சாஹெப் தர்கா

**ISHQ-E-RASOOL ﷺ IS THE SOUL OF IMAN.**

ரஸூலுல்லாஹ்வை நேசிப்பது ஈமானின் உயிர்.

படிக்க...! நாட்டை நேசிப்பது ஈமானின் அங்கம் பாதுகாக்க...!!

**உருஸ் 19**
**இதழ் 17**

முஹர்ரமுல் ஹராம் – 1432
ஜனவரி – 2011

**நன்கொடை : ரூ. 5/-**
**ஆண்டு சந்தா : ரூ. 50/**


کونین کی دولت ہے درگاہ اولیاء میں
اللہ کی رحمت ہے درگاہ اولیاء میں
آنے سے یہاں ہم کو ملتا ہے خدا حافظ
کیا جلوہ قدرت ہے درگاہ اولیاء میں

## இதழின் உள்ளே ......


அனாச்சாரம்! அனாச்சாரம்...!! 2
ஈடு இணையற்ற இரு திங்கட்கிழமைகள்... 3
திருமறையின் தெளிவுரை... 6
புதையல்... 7
நுபுவத்து வழங்கப்பட்டதும், அறிவிக்கப்பட்டதும் எப்போது? 8
மாநபியின் மணிமொழிகள்... 9
ஒட்டகனாரின் ஸ்கூப் நியூஸ்! 10
வலிமார்கள் பேசுகிறார்கள்... 11
மார்க்க சட்ட விளக்கங்கள்...! 12
மீலாது சிறப்புக் கட்டுரை... 13
வேலூர் லத்திஃபியா அரபி கல்லூரியின் முதல்வருடன் ஓர் நேர்காணல்...! 15
சண்டாளன் எஜீதை ஏன் வெறுக்க வேண்டும்...? 17
நாயகத்தின் பெற்றோர்கள் 18
அரேபிய தேசத்தில் புனித தர்கா ஜியாரத் பயணம்...! 19
மனித நேயம் வேண்டி மஹா பாத யாத்திரை...! 20


**தேவைக்கும்,தொடர்புக்கும்...**


M.சையத் அஹ்மத், M.A.,
ஆசிரியர்–சாஹெப் தர்கா இதழ்,
74/176- A, முதல் மாடி, காந்திஜி ரோடு,
இரட்டை மஸ்தான் தர்கா எதிர்புறம்,
தஞ்சாவூர் - 613001

e-mail : editor@sahebdargah.org
www.sahebdargah.org



Printed by
Manickam Printers,Thanjavur - 613001

RNI No. TNTAM/2009/30120
Rnp No.SSP/TJ/29/10-12/TJI Posted On 5th day of the Month at Thanjavur H.O.

அடுத்த வெளியீடு : மார்ச் –2011


Please Visit :
www.aulia-e-hind.com

*நாரயே தக்பீர்! அல்லாஹு அக்பர்!!* *நாரயே ரிஸாலத்! யா ரஸூலல்லாஹ்!!* *நாரயே விலாயத்! யா முஹ்யித்தீன்!!*

## யார் இந்த சூஃபியாக்கள்...!

உலகில் மானிட சமூகத்தை மேன்மைப்படுத்தி, ஏற்றத் தாழ்வுகளை அழித்து, மனிதாபிமானம், சகோதரத்துவம்–சமத்துவம் போதித்து, சாந்தி–சமாதானத்தை நிறுவி, ஏகத்துவம் தான் இஸ்லாம் என்ற இனிய மார்க்கம் என்று எடுத்துக் கூறி – நிலைநாட்டி, கட்டிக் காத்து, அதன் ஆத்மார்த்த புனிதங்களை தங்களின் அன்பு, நேசம், பாசம், தாழ்மை, பணிவு போன்ற நபிபெருமான் நடந்து காட்டிய நன்னடத்தைகள் மூலம் இஸ்லாத்தை உலகெங்கும் எத்திவைத்தவர்கள் அல்லாஹ்வின் நேசம் பெற்ற வல்ல வலிமார்களான **சூஃபியாக்கள்** ஆவர்.

அந்த சூஃபியாக்கள் தங்களை இஸ்லாமிய மார்க்கத்திற்கு தத்தம் செய்து இபாதத்துக்களில் மூழ்கி, ஈமானை ஈன்றெடுத்து, இறைக் காதலில் லயித்து அனைத்தும் அவனே என்று நடந்து வந்த பாதைக்குத் தான் **தசவுஃப்** என்று பெயர்.

சூஃபி என்ற சொல் சஃபா என்ற அரபி வேர்ச் சொல்லில் இருந்து பிரிந்ததாகும்.

சஃபா என்றால் பரிசுத்தம் என்று பொருள்படும்.

அஸ்ஹாபுஸ் சூஃப்பா என்போர் கண்மணி நாயகம் ரஸூலே கரீம் அவர்களின் வீட்டுத் திண்ணையில் வீற்றிருந்த ஹஜ்ரத் அபூ ஹுரைரா, ஹஜ்ரத் பிலால், ஹஜ்ரத் சல்மான் பார்ஸி... போன்ற ரஸூலுல்லாஹ்வின் தோழர்களே...!

சூஃப் என்றால் குளிர்காலத்தில் போர்த்தப்படும் கம்பளியால் ஆன புனித ஆடை என்ற பொருளும் உண்டு.

இப்படி எந்த நிலையிலும் சூஃபி என்ற பெயர் சொல்லின் வேர்ச் சொல் தேடப்படும் போது புனிதமாகவே வருவதால் எல்லா நிலைகளிலும் அல்லாஹ் சூஃபியாக்களை புனிதமாக்கியே வைத்துள்ளான்.

சூஃபித்துவமே உண்மை இஸ்லாம், ஈமான். சூஃபியாக்களே உண்மை முஸ்லிம்கள், முஃமின்கள்.

இந்த ஞானவான்களை விரும்பி நேசித்து ஏற்றுக் கொண்ட அல்லாஹ், திக்குத்திசையெல்லாம் போற்றி தனது புனித மார்க்கத்தை கட்டிக்காக்கும் பொறுப்பை அவர்களுக்கு வழங்கியுள்ளான். அதையுணர்ந்த பெரியோர்களான சங்கை மிகு சூஃபியாக்கள் சென்ற இடமெல்லாம் இஸ்லாமிய மார்க்கம் செழித்தோங்கி சண்டை, சச்சரவுகள் ஏதுமின்றி சமாதானமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதை உலகின் மூலைமுடுக்கெங்கும் நிலை பெற்றிருக்கும் சூஃபியாக்களின் தர்காக்களில், தைக்கால்களில்–கான்காக்களில்–ஆஸ்தானாக்களில் இருக்கும் மஸ்தான்களாக, மஜ்ஸூப்களாக, அப்தால்களாக, அக்தாப்களாக, கௌஸ்களாக வலியுல்லாஹ் என்ற அடையாளத்துடன் மிளிர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

### சூஃபியும், தஸவுஃப்பும்...

சையதுத் தாயிஃபா ஹஜ்ரத் ஜுனைதுல் பக்தாதி ரஹிமஹுமுல்லாஹ் அவர்கள் சொல்கிறார்கள்... "சூஃபி என்பவர் பூமியை போன்றவர் ஆவார். எந்த விதையை நீங்கள் வீசி எறிந்தாலும் அழகிய பூக்களாக, பசிக்கு புசிக்கும் கனிகளாக அது உங்களுக்கு வழங்குகிறது. தஸவுஃப் என்ற ஞானபாட்டை அல்லாஹ்வின் நாட்டத்தையே சார்ந்து நிற்கின்றது."

"அல்லாஹ் அல்லாத அனைத்தையும் விட்டு அவனை அடைவது தஸவுஃப் பாட்டையாகும்." என்கிறார் மேன்மை மிகு மஹான் ஷிப்லி ரஹிமஹுமுல்லாஹ் அவர்கள்.

ஹஜ்ரத் அப்துர் ராஃப் பக்ஷி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்... "ஸூஃபியை எந்த பாவமும் சீண்டுவது கிடையாது. அதனால் அவர்களை அண்டும் எதுவாக இருந்தாலும், யாராக இருந்தாலும் புனிதம் பெறுகிறார்கள். புனிதப் படுத்தப்படுகிறார்கள்."

மஹான் அபூ சிராஜ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்... "ஒரு ஸூஃபியை அல்லாஹ் எந்த நிலையிலும் எந்த இடத்திலும் எதற்காகவும் கைவிட்டான் இல்லை என்பதே அவர்களின் புனிதத் துவத்தின் மேன்மையாகும்."

ஹஜ்ரத் அபூ யாகூப் மஜாயிலி அவர்கள் கூறுகிறார்கள்... "தஸவ்வுஃப் என்ற ஞான விளக்கு ஒரு ஸூஃபியில் அல்லாஹ்வைத் தவிர அனைத்தையும் பொசுக்கி அழித்து விடுகிறது."

அபூ அலி ரூத்பாரி ரஹிமஹுமுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள்... "ஏகனின் வாசலில் கூடாரம் அடித்துக் கொள்வது தஸவ்வுஃப் ஆகும்."

ஸூஃபியாக்களின் இந்த கூற்றுக்களை இமாம் குஷைரி அவர்கள் 'ரிஸாலயே குஷைரியா'என்னும் கிரந்தத்தில் 'தஸவ்வுஃப்' என்ற அத்தியாயத்தில் 536, 537, 538 பக்கங்களில் நெறிப்படுத்திக் கூறுகிறார்கள்.

இறை ரகசிய மெய்ஞ்ஞான வைடூரிய பொக்கிஷங்கள் எல்லா ஸூஃபியாக்களிலும் நீக்கமற நிறைந்து இருப்பதால் நபிகள் பெருமானாரின் கூற்றுப்படி **வரஸதுல் அன்பியா** - நபிமார்களின் உண்மையான வாரிசுகள் இந்த ஸூஃபிமார்களே ஆவர்.

மேன்மைக்குரிய எஜமான் ஏந்தல் முஹ்யித்தீன் ஆண்டகையும், ஆற்றல் மிகு அஜ்மீர் காஜா நாயகமும், தமிழகத்து பாதுஷாவாம் நாகூர் ஆண்டகையும் இன்னும் உலகளாவிய தர்காக்கள் தோறும் போற்றப்படும் வலியுல்லாஹ்கள் அத்தனை பேரும் ஸூஃபியாக்களே!

இந்த ஸூஃபியாக்களிடமே மக்கள் தங்களின் ஜாதி, மத, இன, நிற, பேதங்களை துறந்து, ஏழை பணக்காரன் என்ற வித்தியாசங்களை மறந்து நாடு, தேசம் என்ற எல்லைகளை கடந்து, தங்கள் அனைத்து நாட்ட தேட்டங்களையும், நல்லவைகளையும், மேன்மைகளையும் நாடி, வஸீலா தேடி அவர்களின் பொருட்டால் அல்லாஹ்விடம் பெற்றுக்கொள்கிறார்கள்.

இன்றைய நவ நாகரீகத்தின் தோழர்களாக தங்களின் அரசியல் செல்வாக்கு மூலம் முண்டா தட்டும் மேலை நாடுகள் கூட இன்று தங்களது போலியான வளர்ச்சிகளில் தோல்வியடைந்து தஸவ்வுஃப் நூல்களையும், ஸூஃபியாக்களையும் தேடி, நாடிச் சென்று ஆராய்ந்து இஸ்லாத்தை தழுவி நிம்மதி பெறுகிறார்கள் என்ற செய்திகள் ஸூஃபியாக்களின் புனிதத்தை பறைசாற்றுகிறது.

எனவே நாம் ஷரீஅத்திற்கு கட்டுப்பட்டு, தரீகத்தில் தரிபட்டு, தஸவ்வுஃப் ஞான பாட்டையில் நடந்து, ஸூஃபியாக்களை போற்றி இம்மையிலும், மறுமையிலும் ஈடேற்றம் பெற்று உண்மை முஸ்லிமாய் வாழ்வோம்.

சிந்திப்போம்! செயல்படுவோம்!! வஸ்ஸலாம்!!!

---

### கடலூரில் உருஸ் விழா...

கடலூரில் அடங்கியிருக்கும் காலிப் ஷா வலியுல்லாஹ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் உருஸ் உற்சவம் ஜனவரி 2011 - 13,14,15 ஆகிய தேதிகளில் வழமையான சிறப்புகளுடன் நடைபெற்றது.

தர்கா ஹக்தார் - உரிமையாளர்கள் காலிப் ஷா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் உருஸ் கந்தூரியின் போது சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள்.

### அடியக்கமங்கலத்தில் உருஸ் விழா...

சையத்துஸ் ஸாதாத் சையத் அஹமத் மௌலானா அவர்களின் தர்கா ஷரீஃப் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள அடியக்கமங்கலம் ஊரில் அமைந்துள்ளது. ஹஜ்ரத் அவர்களின் சந்தனம் பூசும் விழா கடந்த முஹர்ரம் பிறை 17, ஹிஜ்ரி1432 - டிசம்பர் 24.2010 அன்று நடை பெற்றது. ஹஜ்ரத் அவர்களின் உருஸ் கந்தூரி விழாவில் திரளான மக்கள் கலந்து கொண்டு ஹஜ்ரத் அவர்களின் துஆ பரக்கத்தைப் பெற்றுச் சென்றார்கள்.

### அனாச்சாரம்! அனாச்சாரம்!!


முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தினர் ஆர்ப்பாட்டம்

*நன்றி: தினமணி - 6,டிசம்பர் 2010*

**தர்காவிற்குச் சென்று ஒரு ஓரமாக உட்கார்ந்து யாஸீன், தபாரக் சூரா ஓதி அவுலியாக்கள் பேரில் ஃபாத்திஹா படித்து வல்ல அல்லாஹ்விடம் துஆ செய்வது ஹராம் ஷிர்க் - பித்அத். ஆனால் நட்ட நடு ரோட்டில் பட்டப்பகலில் பல டி.வி. சேனல்கள் வீடியோ எடுக்க பெண்கள் போராடுவோம்! போராடுவோம்!! என ஆர்ப் பாட்டத்தில் ஈடுபடுவது பக்கா தவ்ஹீதா? அனாச்சாரமா?**

**இஸ்லாமிய சகோதரர்களே! தவறான பாதையில்அழைத்துச் செல்லும் வஹ்ஹாபிய ஜமாஅத் துக்களிடமிருந்து நம் குடும்ப பெண்களைப் பாதுகாப்போம்!**

### சேலம் மாநகரில் யவ்மே ஷஹாதத் எனும் முஹர்ரம் பண்டிகை...!

சேலம் - தன்ஜீமே அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத் சார்பாக யவ்மே ஷஹாதத் எனும் முஹர்ரம் பண்டிகை வழமை போல் இந்த வருடமும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

15.12.2010 அன்று புதன் கிழமை, இமாம் ஹுஸைன் அவர்களின் மௌலூது ஷரீஃப் ஓதப்பட்டது. லுஹருக்குப் பின் உலமாக்களின் பயான்களும், அஸருக்குப்பின் இமாம் ஹுஸைன் அவர்களின் பெயரில் ஃபாத்திஹா ஓதி எல்லோருக்கும் ஷர்பத் கொடுக்கப்பட்டது.

மதரஸா மாணவர்களுக்கு நடந்த தீனியாத் போட்டியில் நன்றாக படித்த மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

#### ஜலால் புறா...

சேலம் நகர ஜலால் புறாவில் இமாம் ஹுஸைனாரின் பஞ்சா எனும் நினைவுச் சின்னம் ஜலால் ஹுஸைனி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் தர்பாரில் இருந்து புறப்பட்டு நகரின் முக்கிய தெருக்கள் வழியாகச் சென்று பின்னர் மீண்டும் தர்காவை வந்தடைந்தது. பின்னர் துஆ செய்து ஃபாத்திஹா ஓதி அனைவருக்கும் தபருக் என்னும் அன்னதானம் வழங்கப்பட்டது.

அனல் வாஹிதுல் கூபர்துல் கபீரு பீ ஜாத்திஹி...!

# ஈடு இணையற்ற இரு திங்கட்கிழமைகள்...!

## நுபுவத்துச் சூரியனும்...! விலாயத்து சந்திரனும்...!!

இந்த உலகின் பல்லாயிரம் ஆண்டுகால நீண்ட நெடும் வரலாற்றில், பற்பல புனித நாட்கள்-பல்லாயிரம் முக்கிய நிகழ்வுகள்-எத்தனையோ கிழமைகள்-எண்ணற்ற திரு நாட்கள் ஆகிய அனைத்திலும் உயர்ந்ததாக அத்தனை கிழமைகளிலும் ஒப்பற்ற ஒரே உயர்நிலைக்குரிதாக இரண்டே இரண்டு திங்கட் கிழமைகள்!

எத்தனையோ காலங்களில்-அத்தனை நாட்களிலும் - கிழமைகளிலும் -ஈடு இணையற்று திகழ்கின்றன இரண்டே இரண்டு திங்கட்கிழமைகள்!

ஆம்! இரண்டே இரண்டு திங்கட் கிழமைகள் (யவ்முல் இஸ்னைன்கள்)

1. கி.பி.571ஆம்ஆண்டு ஏப்ரல் மாதம், 21ஆம் தேதி - புனித ரபியுல் அவ்வல் பிறை 12ஆம் நாள் - திங்கட்கிழமை -

2. கி.பி.1078ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் தேதி - புனித ரமளான் பிறை முதல் நாள் திங்கட்கிழமை -

முதலாவது திங்கட்கிழமை **நுபுவத்துச் சூரியன்** ஆன அண்ணல் நபிகள் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அவதரித்த திருநாள்!

இரண்டாவது திங்கட்கிழமை **விலாயத்துச் சந்திரன்** ஆன முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்கள் அவதரித்த அருள் நாள்!

இரண்டு திங்கட்கிழமைகளிலும்-அவற்றின் இரவுகளிலும் அதிகாலை களிலும் அல்லாஹ்வின் அருட்கொடை கள் என்ற அருள் மழை எல்லையற்றுப் பொழிந்தது!

நுபுவத்துச் சூரியன் ஆன அண்ணல் பெருமான் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அவதரித்த திங்கட்கிழமை இரவிலும், அதிகாலை யிலும் உலகில் பற்பல அற்புதங்கள் நிகழ்ந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள் - விலாயத்துச் சந்திரனான முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்கள் திரு அவதாரம் செய்த திங்கட்கிழமை இரவிலிருந்து அதிகாலை வரை ஆண்டகை அவர்களின் ஜீலானில் உள்ள தப்ரிஸ்தான் மாநிலத்தில் ஆயிரம் ஆண் குழந்தைகள் பிறந்தன, பிற்காலத்தில் அத்தனையும் வலியுல்லாஹ்கள் ஆயினர்!

### அதிசய அற்புதங்கள்...

அல்லாஹ் தன் ஒப்பற்ற ஹபீபாகிய உன்னத திரு நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அவதரித்த திருநாளையும், தன் மாசற்ற மஹபூபாகிய மஹபூப் ஸுப்ஹானி முஹ்யித்தீன் அப்துல் காதர் ஜீலானி பிரபு அவர்கள் அவதரித்த அரிய திருநாளையும் பல்வேறு வகைகளில் பரவசத்திற்குரியதாக பாங்காக்கி வைத்ததைப் பார்க்கிறோம்!

அண்ணலெம்பெருமான் அவர்கள் அவதரித்த அந்த அற்புத திங்கட்கிழமை இரவும், அதிகாலையும் விண்ணிலும், மண்ணிலும் எண்ணற்ற அதிசயங்கள் நடைபெற்றதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்!

உதாரணமாக - பாரசீகத்தில் நெருப்பை வணங்கும் கூட்டத்தினர் வழிப்பட்டு வந்த 5000 ஆண்டுகள் அணையாத நெருப்புக் குண்டம் - தீப்பிளம்பு அண்ணல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அவதரித்த உடனே ஒரே நொடியில் அணைந்து சாம்பலாகி விட்டது!

அதைப் போலவே - அன்றைய மெசபடோமியா பாபிலோனின் (இன்றைய ஈராக்) நவ்ஷேர்வான் மன்னனின் 14 அடுக்குகள் கொண்ட பிரம்மாண்டமான கோட்டையின் 14 அடுக்குகளும் அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அவதரித்த உடனே வீழ்ந்து நொறுங்கி பொடிப்பொடியாகி விட்டது!

அன்று பாரசீகத்தில் 5000 ஆண்டுகள் அணையாத நெருப்புக் குண்டம் அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அவதரித்த உடனே அணைந்து விட்ட அஞ்ஞான சாம்பல் மேட்டின் - பாரசீகத்தின் தப்ரிஸ்தான் மாவட்டத்தின் புனித ஜீலான் நகரின் நீஃப் திருத்தலத்தில் தான் மெய்ஞானக் கதிரவன் ஆன முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்கள் அவதரித்தார்கள்!

இருளில் இருந்து ஒரு ஒளி - அஞ்ஞானத்தில் இருந்து ஒரு மெய்ஞானம் - ஒரு அழிவில் இருந்து ஒரு அகமிய பேரெழுச்சி ஆக்கம்! இது அல்லாஹ்வினால் மட்டுமே சாத்தியம்!

### தவக்கோட்டை...

இதைப் போலவே - அன்று அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அவதரித்த அற்புத தருணத்தில் மெசபடோமியா - பாபிலோனில் வீழ்ந்து நொறுங்கிய நவ்ஷேர்வான் கோட்டை யின் 14 அடுக்குகளில் மிச்சமாகி நின்ற அடித்தளக் கோட்டையிலேதான் 550 ஆண்டுகளுக்குப் பிறகு ஆன்மிகப் பேரரசர் - அகமியக் காவலர் ஆருயிர் ரட்சகர் - விலாயத்து வேந்தர் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்கள் தங்கள் 39வது வயதில் இருந்து 50வது வயது வரை 11 ஆண்டு காலம் நிரந்தரமாகத் தங்கி இரவு பகல் இடைவெளியே இல்லாமல் ஈடு இணையற்ற ஏகாந்த தவக் கனவில் மூழ்கித்திளைத்து -

ஆதியின் மேல் ஆசை அடர்ந்தெரிந்த அக்னியின் ஜோதியினால் வெந்து சுகம் பெற்று சுத்த மெய்ஞான சுடரொளித் தங்கமாக - தன்னிகரற்ற தவராஜ சிங்கமாக அந்தக் கோட்டையிலே இருந்து தான் வெளிப்பட்டு ஒளிவீசினார்கள்!

மொழியால் அரபியல்லாத அஜமியான முஹ்யித்தீன் பிரபு அவர்கள் தங்கி தவஞான யோக சாதனைகளைப் புரிந்ததால் அந்த கோட்டையே புருஜுல் அஜமி என்ற கோட்டை ஆயிற்று!

**(அந்த கோட்டையின் அடிப்பகுதி சுவர்கள் இன்றும் இருப்பதை 2002ல் நான் நேரில் பார்த்தேன் - கட்டுரை ஆசிரியர்)**

மக்கத்து மாமணி மதீனத்து திரு மணி மா நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மதீனாவிலேயே இருந்த காலங்களில், இரவு நேரங்களில் சில தருணங்களில் நகரை விட்டு வெளியே உலாவச் செல்வார்கள், அப்படிப் போகும் போது யாராவது ஒரு தோழரை உடன் அழைத்துச் செல்வார்கள் -

அப்படி அவர்கள் ஒரு நாள் இரவு உலாவச் செல்ல நினைத்த நேரத்தில், ஹஜ்ரத் அப்பாஸ் ரஜியல்லாஹு அன்ஹு அவர்களின் புதல்வர் அப்துல்லாஹ் ரஜியல்லாஹு அன்ஹு அவர்களை உடன் அழைத்துச் சென்றார் கள்-அப்துல்லாஹ் ரஜியல் லாஹு அன்ஹு அவர்கள் அண்ணல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைப் பின் தொடர்ந்தார்கள் -

இருவரும் மதீனாவை விட்டு வெகு தூரம் வந்துவிட்டார்கள் - வழக்கத் தைவிட சிறிது அதிக தொலைவு வந்து விட்டார்கள் - திரும்பிப் பார்த்தால் தொலைவில் இருந்த மதீனாவின் விளக்கு வெளிச்சங்கள் கூட அதிகம் தெரியவில்லை - அவ்வளவு தொலைவு அது - ஒரு பிறை மாதத்தின் கடைசி நாள் பிறை ஒளியும் இல்லாத இருள் நிலை -

வெகுதூரம் வந்துவிட்ட வேந்தர் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஓரிடத்திலே நின்றார்கள்-அங்கிருந்த ஒரு பாறையைக் காட்டி "அப்துல்லாஹ்! நான் வரும் வரை இங்கேயே அமர்ந்திருங்கள்" என்று சொல்லிவிட்டு அண்ணல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அங்கிருந்து கிழக்கு திசையை நோக்கி நடந்தார்கள் -

அப்துல்லாஹ் ரஜியல்லாஹு அன்ஹு அவர்கள் அண்ணல் காட்டிய பாறையில் அமர்ந்தபடி அண்ணலார் சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்தார்கள் -

எதிரிலே சென்று கொண்டிருந்த ஏந்தல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைச் சுற்றி ஒளி வட்டம் தொடர்ந்து கொண்டிருந்தது - அதைத் தவிர வேறு வெளிச்சமில்லை -

திடீரென்று அந்த திசையிலே ஒரு ஒளிக் கூட்டம், அப்துல்லாஹ்வுக்கு ஆச்சரியம்...! கண்ணுக்கெட்டிய தொலைவிலே ஆயிரமாயிரம் ஒளிச் சுடர்கள்!

அந்த ஒளி வெள்ளத்திலே அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மேலும் பேரொளியாகத் திகழ்ந்தார்கள்!!

**அன மின் நூருல்லாஹி!**
**குல்லி ஷையிம் மின் நூரி!**

நான் அல்லாஹ்வின் ஒளியால் உருவானேன், என் ஒளியால் அண்ட சராசரங்கள் அனைத்தும் உருவாயின!

என்று திருவாய் மலர்ந்தருளிய திரு நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஒளிக்கு அழகூட்டும் பேரொளியாகத் திகழ்ந்தார்கள்!

**ஜின்கள் கூட்டம்...**

அங்கே ஒளிவெள்ளத்தின் மத்தியிலே ஆயிரக் கணக்கில் உருவங்கள், மத்தியிலே நடு நாயகமாக நாதர் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள்-அத்தனை உருவங்களும் சாலிஹான ஜின்கள்! அந்த ஜின்கள் கூட்டம் பேரொளிச் சிந்தும் நவரத்தினங்கள் பதித்த அழகிய இரு அரியாசனத்தை அங்கே போட்டு, அதில் அழகுக்கு அழகு சேர்க்கும் அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை அன்புடன் வரவேற்று அந்த அரியாசனத்தில் அமரச் செய்து விட்டு-

அத்தனை ஜின்களும், சுந்தரத் திருநபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைச் சுற்றிச் சுற்றி வந்து பூமான் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைப் புகழ்ந்து போற்றி, ஒரு நீண்ட புகழ் மாலையை (பைத்தை) பாடி ஆடி மகிழ்ந்தார்கள்-

வெகு தொலைவில் இருந்த படி இவற்றை எல்லாம் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு இந்த இனிய குரல்களின் புகழ் மாலை கேட்பதற்கு மிக இனிமையாக இருந்தது!

ஆனால் அது எந்த மொழி என்று தெரியவில்லை - அந்த புகழ் மாலை (பைத்)தின் ஒவ்வொரு அடியின் முடிவிலும் அடிக்கடி தொடர்ந்து வந்த கொண்டிருந்த ஒரு வாசகம் நன்றாகப் புரிந்தது-நினைவிலும் நின்றது-

அந்த வாசகம், "அப்துல் காதிர் - அபதுல் காதிர்" மஹா சக்தியான அல்லாஹ்வின் அடிமை-என்று அர்த்தம் பொதிந்த அப்துல் காதிர் என்ற அந்த ஒரு வார்த்தை மட்டும் நன்றாகப் புரிந்தது!

ஜின்களின் மகத்தான வரவேற்பையும், வாழ்த்து புகழ் மாலையையும், ஏற்றுக் கொண்ட ஏந்தல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அங்கிருந்து விடைப்பெற்று அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இருந்த இடத்திற்கு வந்து அந்த சாலிஹான ஜின்களின் வரவேற்பு வைபவத்தைப் பற்றி விளக்கமாகச் சொன்னார்கள்-

ஆக, அன்று அந்த ஜின்கள் அண்ணல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை ஆசை தீர ஆரவாரத்துடன் **அப்துல் காதிர் - அப்துல் காதிர்** என்று அன்போடு அழைத்து வாழ்த்திப் பாடியதைப் பார்க்கிறோம்!

"சையதுஸ் ஸகலைன்" "ஸையதுல் கவ்னைன்" "ஜின்னி வல் இன்ஸி" என்று குர்ஆனில் பல இடங்களில் அல்லாஹ் கூறியதைப் பார்க்கிறோம் -

மனிதர்களைப் போலவே ஜின் வர்க்கமும் இருப்பது அசலான உண்மை-

மனிதர்கள் - ஜின்கள் ஆகிய இரு வர்க்கத்தினருக்கும், நுபுவத்துச் சூரியன் ஆன அண்ணல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும், விலாயத்துச் சந்திரன் ஆன - முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்களும், மகத்தான - ஒப்பற்ற ஸைய்யிதுகள் ஆக - தலைவர்கள் ஆக இருக்கிறார்கள் -

நம்முடைய பழமையான புகழ் மிக்க புனித கிரந்தங்களிலும், **பரிசுத்த மவ்லிது** ஷரீஃப்களிலும் **சையதுஸ் ஸகலைன்** என்றும் **சையதுல் கவ்னைன்** என்றும் அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும் ஆண்டகை முஹ்யித்தீன் எஜமான் அவர்களும் ஒரே மாதிரி சிறப்பிக்கப்படுகிறார்கள்-

சையதுஸ் ஸகலைன் என்றால் ஜின்கள் மனிதர்கள் ஆகிய இரு வர்க்கத்தினருக்கும் தலைவர் என்று பொருள் -

சையதுல் கவ்னைன் என்றால் இம்மை மறுமை ஆகிய ஈருலோகங்களுக்கும் தலைவர் என்று அர்த்தம்-

**விலாயத்து சந்திரனின் ஜனனம்...**

நுபுவத்துச் சூரியனின் அவதாரத்திற்கு 500 ஆண்டுகளுக்குப் பிறகு -

இங்கே பழம் பெருமை மிக்க பாரசீகத்தின் தப்ரிஸ்தான் மாநிலத்தின் புனிதமே உருவான ஜீலான் நகரின் நிகரற்ற நீஃப் திருத் தலத்தில் - நன்மைகளுக்கே தாயான உம்முல் கைர் அன்னை ஃபாத்திமா அவர்களுக்கு கி.பி.1078ஆம் ஆண்டு மார்ச் 19ஆம் தேதி ஹிஜ்ரி 471ஆம் ஆண்டு புனித ரமளான் முதல் நாள் திங்கட்கிழமை அதிகாலை ஸஹர் நேரத்தை அடுத்து ஃபஜர் தொழுகைக்கு முன் பொன்னான தருணத்தில் - தாயின் கருவில் இருக்கும் போதே ஸஹர் செய்து நோன்பு நோற்றவர்களாக - நோன்பாளியாகவே அவதரித்தார்கள் கருவில் திருவான கண்மணி கௌஸுல் ஆஅலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்கள்!

பிறந்த குழந்தையாக பொழிவோடும் தெளிவோடும் பூப் போல சிரித்தார்கள் -

ஆனால் அதிகாலை பிறந்த குழந்தை வெகு நேரம் ஆகியும் வாய் திறந்து பால் அருந்த வில்லை-

காலை எட்டு மணி - ஒன்பது மணி- பத்து மணி- பதினொரு மணி நண்பகல் - லுஹர் வக்த்து ஆகியும் பால் அருந்த வில்லை - மாலை அசர் நேரமாகியும் பால் குடிக்க வில்லை-

எல்லோரும் கவலை பட்டார்கள் பிறந்தது முதல் இவ்வளவு நேரம் ஆகியும் இது வரை வாய் திறந்து பாலே அருந்தாத இந்த ஒரு நாள் சிசுவின் நிலை என்ன ஆகுமோ என்று எல்லோரும் பதறினார்கள் -

ஆனால் அன்னை ஃபாத்திமா சற்றும் கலங்க வில்லை - அல்லாஹ்வின் அன்பே உருவான தம் அருமை குழந்தையை வைத்த விழி வாங்காமல் அப்படியே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள் -

அஹது - அஹ்மதாகி - அஹ்மது முஹம்மதான அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பரிசுத்த பாரம்பரியத்திலே சுவனத் தலைவி அன்னை ஃபாத்திமா ரஜியல்லாஹு அன்ஹா அவர்களின் தவச் செல்வர் இமாம் ஹுஸைன் ரஜியல்லாஹு அன்ஹு அவர்களின் வாய்மை வழியிலே வந்த இறைநேசச் செல்வியான உம்முல் கைர் அன்னை ஃபாத்திமா ரஜியல்லாஹு அன்ஹா அவர்கள் தம் அருமைக் குழந்தையின் தெய்வீகத் திரு முகத்திலே ஒரு பேரொளியைத் தருசித்தார்கள் -

**விண்ணிலிருந்து மண்ணிற்கு...**

அந்த பேரொளிப் பிரவாகத்திலே விண்ணுக்கும் மண்ணுக்கும் ஒரு இணைப்புப் பாலம் போல் ஒரு ஒளிக்கோடு தோன்றித் துலங்கியது!-

விண்ணுலக சிறப்புகளை எல்லாம் மண்ணுலகிற்கு கொண்டு வரப்போகின்ற மாதவ ஞான ஒளிப் பொக்கிஷமாக தம் மடியிலே இருந்த மதலை மாதரசி ஃபாத்திமாவுக்குத் தோன்றியது!

விண்ணைக்கடந்து அப்பாலுக் கப்பாலாய் அனைத்தையும் கடந்து - அனைத்தையும் கவிந்து அனைத்தின் கருப்பொருளாய் நின்றிலங்கும் **ஹக்கான காதிரும்** - மாதவத் திலகமாக மண்ணிலே இன்று மலர்ந்து மகத்தான அகமிய ஞான நறுமணம் வீசிக்கொண்டி ருக்கும் **அப்தான** இந்த கோமேதக வைர **ஞானக் குழந்தையும்** ஒன்றாகவே தெரிந்தது!

ஆண்டான் - அடிமை என்ற வேற்றுமை விகாரங்கள் அறவே இல்லாத ஒரு ஒப்பற்ற சுத்த மாதவச் சுடரொளி பிரகாசித்தது!

காதிரும் - அப்தும் ஒன்றாகவே புரிந்தது - அப்துல் காதிர் என்ற அகமியத்

திருநாமம் அன்னை ஃபாத்திமா அவர்களின் மாசற்ற மனதிலே பளிச்சிட்டது!

500 ஆண்டுகளுக்கு முன் - அன்று நுபுவத்துச் சூரியனுக்கு அருளப்பட்ட அதே அப்துல் காதிர் இன்று விலாயத் சந்திரனுக்கு சூட்டப்பட்டது!

**அல்லாஹ்வும், ரஸூலும் தனித்திருக்கும் தருணங்கள்!**

மதினா மாநகரிலே மாநபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஒரு நாள், தங்கள் எளிய இல்லத்தின் அறையிலே தனித்திருந்தார்கள் -

அப்போது அன்னை ஆயிஷா நாயகி ரஜியல்லாஹு அன்ஹா அவர்கள் அங்கு வந்து,

"யா ரஸூலல்லல்லாஹ்!" என்று அழைத்தபடி கதவைத் தட்டினார்கள் கதவு திறக்கவுமில்லை, அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பதில் ஏதும் கொடுக்கவுமில்லை-

அன்னை அவர்கள் மீண்டும் மீண்டும் அழைத்துக் கொண்டே இருந்தார்கள் -

பரிசுத்த திருநபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிட மிருந்து பதிலே வரவில்லை -

வேண்டுமென்றே அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மௌனம் சாதிக்கிறார்கள் என்று நினைத்த அன்னை ஆயிஷா ரஜியல்லாஹு அன்ஹா அவர்கள் சற்று கனமான உரிமைக் குரலில் தன் பலம் கொண்ட உரத்தக் குரலில் -

"யா ரஸூலல்லாஹ்!" என்று குரல் கொடுத்தார்கள்!

உள்ளே இருந்து "யாரது?" என்ற குரல் வந்தது!

"நான்தான் ஆயிஷா! கதவைத் திறங்கள்!" என்றார் ஆயிஷா ரஜியல்லாஹு அன்ஹா!

"எந்த ஆயிஷா?" மீண்டும் கேள்வி-

வேந்தர் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் விளையாட்டாக அப்படிக் கேட்கிறார்கள் என்று நினைத்த அன்னை ஆயிஷா ரஜியல்லாஹு அன்ஹா அவர்கள் -

எந்த ஆயிஷா என்ற கேள்விக்கு தானும் விளையாட்டாக -

"அபூபக்கர் மகள் ஆயிஷா!" என்றார்கள் அன்னை-

"எந்த அபூபக்கர்?" என்ற கேள்வி வந்தது!

அவ்வளவுதான் பொறுமை இழந்த அன்னை அவர்கள் அங்கிருந்து அகன்றுவிட்டார்கள்-

சிறிது நேரத்திற்குப் பின் அண்ணல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அவர்களாகவே அறையினை திறந்து கொண்டு வெளியே வந்தார்கள் -

உடல் எங்கும் வியர்வைத் துளிகள் - சற்றே சோர்வாக இருந்த சத்தியத் திருநபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் திரு முகத்திலே ஒளி படர்ந்திருந்தது - அன்னை ஆயிஷா ரஜியல்லாஹு அன்ஹா அவர்கள் அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைப் பார்த்து உரிமையோடு கேட்டார்கள் ;

"யா ரஸூலல்லாஹ்! நான் அத்தனை முறைகள் அழைத்தும் பதிலே இல்லை- பிறகு நான் தான் ஆயிஷா அழைக்கிறேன் என்றால் எந்த ஆயிஷா என்றீர்கள் - அபூபக்கர் மகள் ஆயிஷா என்றால் எந்த அபூபக்கர் என்கிறீர்கள் - ஏன் அப்படி பேசினீர்கள்?" என்று குழப்பத்தோடு கேட்டார்கள் -

அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஆழ்ந்த பெருமூச்சுடன் அமைதியுடன் பேசினார்கள்;

"அறிந்துகொள் ஆயிஷா!

எனக்கும் அல்லாஹ்வுக்கும் என்று சில தனித் தருணங்கள் உண்டு அந்த நேரங்களில் வானவர் தலைவரான ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் கூட இடையிலே வர முடியாது -

நானும் அல்லாஹ்வும் மட்டும் தனித்திருக்கும் தன்னிகரற்ற தருணங்களில் எனக்கு இந்த உலகத்தின் எந்த விஷயங்களோ பெயர்களோ உறவுகளோ இன்ப துன்ப உணர்வுகளோ எதுவுமே புரியாது - அப்படி ஒரு சந்தர்ப்பத்தில் நீ அழைத்ததால் தான் நான் அப்படி கேட்டேன்!" என்று ஏகத்துவத்திரு நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் இதயம் திறந்து பேசினார்கள்!

இதைப் போலவே-

ஆன்மிகப் பேரரசர் அகமியக் காவலர் ஆருயிர் இரட்சகர் மெய்ஞான ராஜ மகுட தவராஜ ராஜர் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்கள் தங்கள் பாபுல் அஸ்ரஜ் தவச்சாலையில் தங்கள் தனி அறையில் தனித்து இருக்கும் தன்னிகரற்ற தருணங்களில் அல்லாஹ்வும் அவர்களும் ஒன்றுபட்டு - ஒன்று அல்லாத மற்றொன்று இல்லவே இல்லை என்ற ஒப்பற்ற உன்னத தருணங்களில் அவர்களின் மூடிய கதவின் ஓர விளிம்புகளின் வழியாக ஒளிச் சுடர்கள் வெளியே பீரிட்டடிக்கும்!-

ஒரு நாள் ஆண்டகை அவர்கள் தங்கள் தவச்சாலையின் தனி அறையில் இருந்த போது ஒப்பற்ற எஜமானனின் உறைவிடத்தின் உள்ளிருந்து வழக்கத்தைவிட அன்று மிக அதிகமாக ஒளிவெள்ளம் வெளியே பீரிட்டுக் கொண்டு இருந்தது -

அந்த நேரத்தில் அந்தப் பக்கமாக வந்த ஆண்டகை அவர்களின் மூத்தப் புதல்வர் சங்கை மிகு இமாம் அப்துல் வஹ்ஹாப் ரஜியல்லாஹு அன்ஹு அவர்கள், எஜமானின் அறையில் இருந்து மிக அதிகமாக வெளிப்பட்ட ஒளி வெள்ளத்தைப் பார்த்து திகைத்தார்கள்!-

தன்னையும் மீறி உணர்ச்சி வசப்பட்டு "தந்தையே!" என்று அழைத்த வண்ணம் அறையை நெருங்கினார்கள்-

உள்ளிருந்து மாறுபட்ட கர்ஜனைக்குரல் ஒலித்தது ; "யார் யாருக்குத் தந்தை ! அருகில் நெருங்காதே பொசுங்கி விடுவாய்...!!"

இந்த கர்ஜனைக் குரலைக் கேட்டு புதல்வர் அவர்கள் அப்படியே திகைத்து நின்று விட்டார்கள்!

இது அல்லாஹ்வும் அவர்களும் ஒன்றாகவே நின்ற உயர் தருணம்!

அஹதான மெய்ப் பொருளின் - ஹக்கானியத்தின் அவதார வெளிப்பாடான-

ரஹ்மத்துல் ஆலமீன் அண்ணல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும் - கௌஸுல் ஆலமீன் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்களும் -

மனித குலத்திற்கு வாழ்வாங்கு வாழ வழிகாட்ட வேண்டிய சிறப்பான பொறுப்புக்கும் உரியவர்கள் என்பதால்-

உலகின் தேவைகள் எதுவுமே இல்லாத அவர்கள் -

ஆன்மிகம் முதல் அன்றாட வாழ்க்கை நிலைகள் வரை அத்தனைக்கும் சிறப்பான வழிகாட்டிகளாக திகழ்கிறார்கள்-

ரஹ்மானும் ரஹீமும் ஆகிய அல்லாஹ்வின் திருவாக்கினாலேயே ரஊஃபுர் ரஹீம் என்று அடையாளம் காட்டப்பட்ட அண்ணல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அன்றாட வாழ்க்கையில் தங்கள் மனைவிமார்களுக்கு இல்லறத்தில் எல்லா உதவிகளையும் செய்தார்கள் - சமயத்தில் தோல் துருத்திகளில் நீர் கொண்டு வந்து கொடுப்பார்கள் - திரிகையில் மாவரைத்தும் கொடுத்தி ருக்கிறார்கள்!

ரப்பாகிய - ரட்சகனாகிய அல்லாஹ்வின் திருவாக்கினாலேயே

கௌஸுல் அஅலமே...! ரட்சகரே...! என்று அன்போடு அழைக்கப்பட்ட முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்கள், தங்கள் 51வது வயதில் இல்லறத்தில் ஈடுபட்ட பிறகு தங்கள் மனைவியர்களுக்கு ஏதேனும் தேவை என்றால் எத்தனை பேர்கள் அருகில் இருந்தாலும் யாரையும் அனுப்பாமல் தாங்களே கடைவீதிக்குச் சென்று தங்கள் மனைவிமார்களுக்குத் தேவையான அத்தனைப் பொருள்களையும் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து அன்பைப் பொழிவார்கள்!

**ஆக்கம் : முஹ்யித்தீன் அடிமை முஹ்யித்தீன் ஷாஹுல் ஹமீது காதிரி**



علم القرآن يعنى تفسير القرآن

# திருமறையின் தெளிவுரை



உருது மூலம் : ஹகீமுல் உம்மத் அஹ்மத் யார்கான் ரஹ்மதுல்லாஹி அலைஹி --- தமிழில் : மௌலவி ஹாபிஸ் அப்துர் ரஜ்ஜாக் காதிரி ஃபூ:.பி

**இஸ்லாம் என்றால் என்ன?**

அன்பிற்கினிய வாசகர்களே! நாம் கடந்த இதழிலிருந்து இஸ்லாம் எனும் வார்த்தையின் விளக்கத்தைப் பார்த்து வருகிறோம். இஸ்லாம் என்னும் வார்த்தை ஈமான் எனும் பொருளில் வருவதை குர்ஆனில் பல இடங்களில் கூறப்படும் ஆயத்துக்களின் மூலம் சென்ற இதழில் தெளிவு பெற்று இருப்பீர்கள் என நம்புகிறோம்.

இன்னும் சில இடங்களில் இஸ்லாம் எனும் வார்த்தை வழிபடுதல் எனும் பொருளில் புழங்கப்படு வதையும் நாம் கண்டோம். இந்த இதழில் இதன் தொடர்ச்சியாக சில வசனங்களை நாம் காண்போம்.

**1. இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம், இஸ்மாயீல் அலைஹிஸ் ஸலாம் ஆகிய இருவரும் இறைவனுக்கு வழிப்பட்டு இஸ்மாயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்களை அறுக்க கிடத்திய போது நாம் இப்ராஹீமே! என்று அழைத்தோம்.**

**2. இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாமிடம் அவனது இறைவ னுக்கு வழிப்படுவீராக என்ற போது அவர்கள் "அகிலத்தாரின் ரட்சகனுக்கு வழிப்பட்டேன்" என்று கூறினார்கள்.**

மேற்கண்ட இரு வசனங்களிலும் இஸ்லாம் எனும் வார்த்தைக்கு ஈமான் என்று பொருள் கொள்ளக் கூடாது. காரணம் நபிமார்கள் பிறப்பிலேயே முஃமின்களாக இருக்கிறார்கள். எனவே இந்த வசனங்களில் வழிப்படுதல் என்றே பொருள் கூற வேண்டும்.

மேற்கண்ட வசனத்தில் நோய், ஆரோக்கியம், மரணம், வாழ்வு போன்ற இறை விதிக்கு வழிபடுதல்-இன்னும் ஷரீஅத்திற்கு வழிபடுதல் என்றே இதற்கு பொருள் கூறப்பட வேண்டும்.

இந்த விளக்கத்தில் நாம் கவனிக்க வேண்டிய மிக முக்கியமானதொரு கருத்து என்னவென்றால் வழிபடுதல் என்பது உடல் மட்டுமின்றி உள்ளத்துடன் அது தொடர்பு கொண்டதாக இருக்க வேண்டும் என்பதே, உடல் வழிப்படுதல் என்பது வேறு, உள்ளம் வழிப்படுதல் என்பது வேறு.

மேற்கண்ட இரு வசனத்திலும் உடலும், உள்ளமும் இணைந்து வழிப்பட்டார்கள் என உறுதி கொள்ள வேண்டும். இந்த வழிப்பாடுதான் முஃமின்களின் வழியாகும். இதற்கு மாற்றமாக உள்ளதால் வழிபடாமல் மற்றவர்களுக்கு காண்பிப்பதற்காக உடலால் மட்டும் வழிபடுபவர்கள் முனாபிக்குகள் ஆவர்.

**ஈமான் வேறு இஸ்லாம் வேறு :-**

"முஃமின்கள் என்று கூறாதீர்கள். முஸ்லிம்கள் என்று கூறுங்கள்" என முனாபிக்குகளைப் பார்த்து இறைவன் கூறுகின்றான். இந்த வசனத்தில் முனாபிகீன்களை இறைவன் முஸ்லிம் என கூறுகின்றானே! என வாசகர்கள் அச்சம் கொள்ள தேவையில்லை. காரணம் இதன் விளக்கத்தை இந்த இதழிலேயே உங்களுக்கு விளக்கப் போகிறேன்.

இந்த வசனத்தில் முஸ்லிம் என கூறப்பட்டதின் நோக்கம், உடல் ரீதியாக இஸ்லாமிய வழிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடந்து, உள்ளத்தளவில் வழிப்படாமல் நடந்ததையே உடல் ரீதியாக வழிப்பட்டவர்கள் (முஸ்லிம்) என்று மேற்படி வசனம் கூறுகின்றது. நபியவர்களையும், அவர்தம் புனிதமான தோழர் பெருமக்களையும் ஏமாற்றி தன்னை முஸ்லிம் என்ற போர்வையில் வெளிக்காட்டிக் கொள்ளும் விதமாக வெளிப்டையாக இஸ்லாமிய சட்டத்தை ஏற்றுக் கொண்டவர்களாக நடந்து கொண்ட முனாபிக்குகளை குறித்து சூரா பக்ராவின் ஆரம்ப ஆயத்துக்களில் இறைவன் தெளிவாக கூறியுள்ளான். சூரத்துல் முனாபிகீன் எனும் ஓர் சூராவையே இறக்கியுள்ளான்.

காரணம் இவர்கள் காபிர்களை விட முஷ்ரிகீன்களைவிட மிக கேடுகெட்டவர்கள். மிகுந்த ஆபத்தானவர்கள். முஸ்லிம்கள் என்ற போர்வையில் வாழும் காபிர்கள். இவர்களை இன்றைய பொது ஜனங்கள் மிகத் தெளிவாக அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். இல்லையேல் உங்களின் ஈமானை பாதுகாத்துக் கொள்வது மிகக் கடினமாகிவிடும்.

**தப்லீக் முனாபிக்குகள்...**

வெளிப்படையாக தொப்பி அணிந்து, தாடி வைத்து, இஸ்லாமிய பெயரை சூட்டிக் கொண்டு மௌலானா, மௌலவி என்ற மார்க்க அறிஞர் போன்று பட்டம் சூட்டிக் கொண்டு நமது உயிரினும் மேலான கண்மணி நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை தகாத வார்த்தைகளைக் கொண்டு ஏசுவதும், தவறான எண்ணங்களை அவர்கள் மீது ஏற்படுத்துவதும், இஸ்லாமிய அடிப்படை கொள்கை களில் குழப்பத்தை ஏற்படுத்துவதும், இறைவனுக்கு உருவம் உண்டு என நம்ப வைப்பதும், மத துவேஷங்களை மனதில் ஏற்படுத்தும் இன்னும் இஸ்லாமிய உலகம் அழிவதையே நோக்கமாக கொண்ட யஹூதி நசாராக்களுடன் கைகோர்த்து நம்மையும், நமது இனத்தையும், நமது ஈமானையும், அழிக்க துடிக்கும் இந்த முனாபிக்குகளான தேவ்பந்திகள், தப்லீக் ஜமாஅத்தினர்கள், தவ்ஹீத் ஜமாஅத்தினர்கள், ஜாக், ஸலஃபி, ஜமாஅத்தே இஸ்லாமி, காதியானிகள் போன்ற குழப்பவாதிகளைவிட்டும் நாம் முற்றாக ஒதுங்கி இராவிட்டால் நமது ஈமானை பாதுகாப்பது கேள்விக்குறியே!

இத்தகைய முனாஃபிகீன்க ளோடு நாம் நட்புறவு கொள்வது, திருமண உறவு கொள்வது போன்ற எத்தகைய உறவும் மேற்கொள்ளக் கூடாது. இவ்வாறு நாம் நம்மை பாது காத்துக் கொண்டாலே ஒழிய நமது ஈமானை பாதுகாப்பது கடினமாகி விடும். அல்லாஹ் இத்தகைய முனாபிக்குகளை விட்டு நம்மையும், நமது உற்றார் உறவினர் நண்பர்களை யும் பாதுகாத்தருள்வானாக ஆமீன்!

இன்ஷா அல்லாஹ் வரும் இதழில் தக்வா என்பதின் விளக்கத்தைக் காண்போம்.

**இன்ஷா அல்லாஹ் தெளிவடைவோம்.....**

**புதையல்...11 தப்லீக் வஹ்ஹாபிகள் தமிழகத்தில் நுழைந்த கதை...**

இன்று தவ்ஹீது வாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் வஹ்ஹாபிகள் பகிரங்கமாக அல்லாஹ்வின் மீதும் அவன் ரஸூலின் மீதும் அவுலியாக்களின் மீதும் வைக்கும் தரக்குறைவான விமர்சனங்களையும், தங்களின் தப்புத் தப்பான மார்க்க சட்டங்களையும் உள்ளே மறைத்துக் கொண்டு மெல்ல மெல்ல வஹ்ஹாபிய கொள்கைகளுடன் தேவ்பந்து மதரஸாவின் ஆதரவோடு அதே வஹ்ஹாபிய நச்சுக் கருத்துக்களை தமிழகத்தின் உள்ளே நுழைக்க நெற்றியில் கருப்பும், கையில் தஸ்பியும், மழித்த மீசையும், நீண்ட தாடியும், அதைவிட நீண்ட ஜிப்பாவும் போட்ட தப்லீகர்கள் முயன்ற போது அவர்களை நம் தமிழகத்து சுன்னத் ஜமா அத்தின் அன்றைய சங்கை மிகு உலமாக்கள் எப்படி தடுத்தனர் என்பதை அறிந்து கொள்ளும் நோக்கத்தோடு துவக்கப்பட்டதுதான் இந்த புதையல் பகுதி .

# காயிதே மில்லத்தும்! தப்லீக் இயக்கமும்!!

***16.06.1986 ல் வெளியிடப்பட்ட நோட்டிஸ்!***

நல்லதை ஏற்பதும், கெட்டதை தவிர்ப்பதும் மனிதப்பண்புகளில் மிகச் சிறந்த குணமாகும். டில்லி தப்லீக் ஜமாஅத்தை பரிசீலிக்காத காரணத்தால் நல்லதாக இருக்குமென எண்ணி ஏற்றுக் கொண்டவர்கள் கூட, அவர்களின் தவறான சொல், செயல்களைக் கண்டதும், அதை விட்டு விலக ஆரம்பித்து விட்டனர். உதாரணமாக அதற்கு தஞ்சை மாநகரமே ஒரு சான்றாகும். இவ்வூரில் சென்ற மாதங்களில் தப்லீகர்கள் சுமார் இரு வாரங்கள் தங்கி தெருக்களில் சுற்றி தம் இயக்கத்தில் சேர்க்க எல்லா முயற்சிகளும் செய்து பார்த்தனர். ஆனால் யாரும் அவர்கள் பக்கம் சாயவே இல்லையென்பது கண் கூடு.

எல்லையம்மன் கோவில் தெரு பள்ளியில் ஒருவர் காலையில் செல்ல நேர்ந்தது. அங்கு இமாமவர்கள், ஏதோ சத்தம் போடுவதைக்கண்டு என்னவென வினவ அதற்கவர்; தப்லீக் ஜமாஅத்தார் இங்கு வந்து தங்கிச் சென்றார்கள். அவர்கள் துணிமணிகளையெல்லாம் ஹவுஸில் கொண்டுவந்து கழுவியதோடு உணவருந்திய பாத்திரங்களை மீதமிருந்த உணவோடு பள்ளி ஹவுஸினுள்ளே விட்டுக் கழுவியதால் அத்தண்ணீரில் துண்டுகளும் சாதமும் கலந்து போய் தண்ணீர் எல்லாம் எண்ணெய் நீராக மாறி மிதக்கிறது. தவிர, சிறுநீர் கழிக்கும் இடத்தை எல்லாம் அசுத்தமாக்கி விட்டுச் சென்றுள்ளனர்! பள்ளி வாசலை சத்திரத்தைவிடக் கேவலமாக செய்வது நியாயமா?

நாம் தீன் பிரகாரம் நடந்து கொள்ளக் கூடியவர்கள் என கும்மாளம் அடித்துக் கொண்டு தப்லீகர்கள் பேசுகிறார்கள். தீனுக்கு நேர் விரோதமாக அவர்களது செயல் முறை இருப்பதால் தான் அதில் மாட்டிக் கொண்டவர்கள் கூட அதிலிருந்து விலகுகிறார்கள். அதற்குச் சான்றாக சென்னையைச் சேர்ந்த ஜனாப் சங்கு - சையத் அப்துல் காதர் சாஹிப் அவர்களின் விளக்கமே ஆதாரமாக இருப்பதை (20.02.1986. குமுதம்) பார்க்க. அவர்களின் குறைகளைக் கூறும் போது இது அறியாதவர்களின் சொல் என்று தட்டிக் கழிக்கிறார்கள்.

தப்லீகர்களுடைய சொல், செயல் குறைகளை பொது மக்கள் மட்டும் புரிந்து அந்த இயக்கத்தை வெறுக்கவில்லை. ஆலிம்கள் அன்றி நம் நாட்டு அரசியல் தலைவர்களில் மாபெரும் அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவராகிய கண்ணிய மிக்க காயிதே மில்லத் இஸ்மாயீல் சாஹிப் அவர்களும் அறியாதவர்கள் கூட புரியும் விதத்தில் கண்டித்திருக்கிறார்கள். அதுவும் நபிபெருமான் காட்டிய வழியல்லவே; என்றல்லவா கூறிவிட்டார்கள்!! அறிவாளருக்கு இது ஒன்றே போதுமானது.

காயிதே மில்லத் அவர்கள் நமது நலன் காக்க வேண்டி யாருடைய தாட்சனையையும் பார்க்காது தெளிவாக தவறுகளை எடுத்துக் கூறியுள்ளதை நாம் கவனிக்க வேண்டும். அக்கறையுடனும், தைரியத்துடனும் அவர்கள் எடுத்துச் சொன்னதை நாலாப்பக்கமும் பரப்புவதும், அதற்கிணங்க ஈடுபாடுகளில் இறங்குவது; அதற்கு செலவு செய்வதும் நமது கடமையாகும். ஆகையால் இவ்வழியில் செலவு செய்யுங்கள்! பரப்புங்கள்!!

அதற்குரிய நற்கூலி அல்லாஹ்விடம் நிச்சயமாக உண்டு.

## தப்லீக் இயக்கம் பற்றி காயிதே மில்லத்

ஒரு விஷயம் கேள்விப்படுகிறேன். தொழச் சொல்வதில் முனைந்திருக்கும் கூட்டத்தார் அரசியல் வேண்டாம். அதை அல்லாஹ் கவனித்துக் கொள்வான் என்று பிரஸ்தாபிப்பதாக தெரிகிறது. அரசியலை விடவேண்டியது என்று சொல்வதும் உண்மையானால் எதையெதை விட வேண்டும் என்று சொல்ல வேண்டும்! எது அரசியல்? எது மார்க்கம் என்று பிரித்துச் சொல்வார்களா?

ஒரு முஸ்லிமின் அன்றாட வாழ்க்கையில் அரசியல் புகாது இருக்கின்றதா? அரசியல் வேண்டாம் என்றால் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அல்லவா அரசியலை விட்டிருக்க வேண்டும். அரசியலை நடத்திக் காட்டியிருக்கும் போது நம்மைப் பார்த்து அரசியலை விட்டுவிடுங்கள் என்றால் அதற்கு அர்த்தம் புரியவில்லை.

அல்லாஹ் பார்த்துக் கொள்வான் என்ற பேச்சு அடிபடுகிறது. ஆம்! உண்மைதான். அல்லாஹ் நினைத்தால் அன்றி ஓர் அணுவும் அசையாது. ஆனால் எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் சும்மா இருங்கள் என்று அல்லாஹ் எங்காவது சொல்லியிருக்கிறானா? நீங்கள் சாப்பிடாமல் பிழைப்பதற்கு எந்தவித முயற்சியும் செய்யாமல் கொஞ்சம் சும்மா இருங்களேன் பார்க்கலாம்! அல்லாஹ், ரஸூலுல்லாஹ் அவர்களுக்கல்லவா சொல்லியிருக்க வேண்டும்! ஆனால் அப்படிச் சொல்ல வில்லையே! ரஸூலுல்லாஹ் அவர்கள் அடிபட்டார்களே, பல் உடைபட்டதே, நடையாக அலைந்து திரிந்தார்களே, கூட்டங்கள் கூட்டி மக்களை வருத்தி அழைத்து மார்க்கத்தை போதித்தார்களே! இவை எல்லாம் ஏன் செய்தார்கள்? யுத்தங்களும் செய்தார்களே! இவை “அனைத்தையும் அல்லாஹ் பார்த்துக் கொள்வான்” என்று இருப்பது நபி பெருமானார் காட்டிய வழியல்லவே!

**(காயிதே மில்லத் இஸ்மாயீல் சாஹிப் இனிய பேச்சுக்கள் என்ற நூலிலிருந்து பக் 26,27)**

தப்லீக் இயக்கம் தொழுகைக்கு அழைக்கும் இயக்கம் - முஸ்லிம்களுக்கு வேறு எந்த கேடும் செய்வதில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். அவர் சொல் உண்மைக்கு நேர்மாறானது. அவ்வாறென்றால் பின் ஏன் அரசியல் வேண்டாமென்று மக்களுக்கு சொல்லி கொடுக்கிறார்கள்! அவர்களுடைய இந்த பெரிய தவறு நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் கேடு விளைவிக்கும் என்று கண்டுதானே காயிதே மில்லத் அவர்களே மக்களை அந்த ஜமாஅத்தில் சேரக் கூடாதென்ற எண்ணத்துடன் கண்டித்துள்ளார்கள். அரசியல் வேண்டாமென்ற அந்த வார்த்தையும் வியாபாரம், கல்வி; உத்தியோகங்கள், தொழில்கள், குடும்ப பொறுப்பு போன்ற எல்லாவற்றையும் விட்டு எங்களுடன் சேர்ந்துகொள். அல்லாஹ் பார்த்துக் கொள்வான் என்பன சிறு வார்த்தைகளாக அமைந்துள்ளது. ஆனால் அதனுடைய கேடோ விசாலமானது. அவர்களுடைய பேச்சைக் கேட்டு எல்லாவற்றையும் விட்டு அவர்களுடன் சென்றவர்களின் எத்தனையோ குடும்பங்கள் அவதிப்படுகின்றன. ஆகையால் தான் கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்கள் தொழுகைக்கு அழைக்கும் இயக்கம் என்ற வார்த்தையை கேட்டதும் அவ்வியக்கத்தால் பின்னர்

விளையப் போகும் கேடுகளைப் புரிந்து முஸ்லிம்கள் அதில் சேரக் கூடாதென ; அவர்களால் நேரப் போகும் கேடுகளில் ஒன்றிரண்டை மட்டும் உதாரணத்திற்கு வேண்டி எடுத்துக் காட்டி வெட்ட வெளிச்சமாக கண்டித்தார்கள்.

அவ்வாறிருந்தும், நாம் காயிதே மில்லத் அவர்களை மிகவும் மதிக்கிறோம். அவர் அன்பு நம் உள்ளத்தில் குடிகொண்டிருக்கின்றதென மாரைத் தட்டும் சிலர் ; அவர் கண்டித்த பின்பும் அவ்வியக்கத்தை ஆதரிக்க முற்படுவது சரிதானா? இவர்கள் சமுதாயத்தை ஏமாற்றுகிறார்களா? அல்லது, அவர் ஏமாந்திருக்கின்றார் என்று நினைப்பதா?

கருத்தளவில் இதரருடைய கூலியில்லாத அடிமை போன்று, அவர் போக்குக்கு வசப்பட்டவர்களாக இருப்பதற்கு அம்மஆ என்று சொல்லப் படும். அதாவது உங்களில் யாரும் அம்மஆவாக இருந்து விடக் கூடாது. அவர் நல்வழியில் நடந்தால் நடப்பேன், தவறாக நடந்தாலும் நானும் அவ்வாறே நடப்பேன் என்பது இருத்தலாகாது. நேர்மையாக நடந்தால் சரி! தவறாக நடந்தால் அவர்களை நீங்கள் பின்பற்றக் கூடாது என்று ஹதீது இருந்தும் அதன் கட்டளைக்குமாறு செய்வது, கேடுகள் எடுத்துச் சொல்லாமலிருப்பது முஸ்லிம்களை ஏமாற்றுவதாகுமல் லவா? உண்மையை மறைக்கலாகாதென குர்ஆனிலே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் உண்மையை எடுத்து விளக்குவோமாக! ஆமீன்!

**இங்ஙனம்,**
**அஹ்லிஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்**
***1438, தெற்கு வீதி, தஞ்சாவூர்.***
***ஏப்ரல்***
***16.06.1986***

பல இடங்களில் இதனை அச்சிட்டு மக்களிடம் பரத்தியதை கண்டு நாங்களும் இதனை மறுமுறை அச்சிடுகிறோம். இதனை அச்சிட்டு எல்லோருக்கும் வினியோகம் செய்து நற்கூலி பெறுங்கள்.

**மீண்டும் அச்சிட்டோர் :**
**A.சையத் முபாரக்,**
**C3-CBCகுவாட்டர்ஸ், ஆத்துகாடு,**
**சேலம்-635007.**

மீலாதுன்நபி கட்டுரை

# கண்மணி நாயகத்திற்கு நுபுவத்து வழங்கப்பட்டதும் நுபுவத்து அறிவிக்கப்பட்டதும் எப்பொழுது...?

எம்பெருமானார் நபிகள் கோமான் கண்மணிநாயகம் ரஸூலே கரீம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் நுபுவத்தின் தாத்பரியமாக இந்த உலக அகவாழ்வில் ஹஜ்ரத் அப்துல்லாஹ் பீபி ஆமினா அவர்களின் அருந்தவப் புதல்வராய் மீலாது ஜனனம். அதன் பிறகு 40 ஆண்டுகள் கழித்து நுபுவத் வழங்கப்பட்டது. இந்த கண்ணோட்டத் தில் பாமரர் மட்டுமல்ல மெத்தப்படித்த ஆலிம்களும், மௌலவிகளும் பிரசங்கத் தில் பேசியும், நூட்களில் எழுதியும் வருகிறார்கள். அதிலும் குறிப்பாக வஹ்ஹாபிய விஷவித்துக்களை தாங்கி நிற்கும் தப்லீகிய தேவ்பந்து ஆலிம்கள் தம் நூட்களில் உயிருக்கு உயிரான உயிரை விட மேலான ஈமானின் அஸ்தி வாரமாகக் கருதப்படும் ரஸூலுல்லாஹ் வின் பேரிலேயே சொல்ல நாகூசும் வார்த்தைகளை எல்லாம் எழுதி வைத்திருக்கிறார்கள்.

இக்கட்டுரையில் நாம் நுபுவத் என்பது எம்பெருமானார் நபிகள் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு ஆதம் நபியவர்கள் பிறப்பதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே வழங்கப்பட்டு விட்டது என்ப தையும் ரஸூல் அவர்கள் இந்த பூவுலகில் ஜனிப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே புனித மதீனா மாநகர் நிர்மாணிக் கப்பட்டதையும் அசைக்க முடியாத ஆதாரப்பூர்வமான ரிவாயத்துக்களைக் கொண்டு நிரூபிப்போம்.

கிதாபுஷ் ஷிஃபா என்னும் கிரந்தத்தில் ஹஜ்ரத் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஜஹு அவர்களைக் கொண்டு ரிவாயத்து செய்கிறார்கள். நபிகள் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் "ஓ அலீயே! நம்முடைய தந்தை ஆதம் நபி படைக்கப்படுவதற்கு 2000 ஆண்டு களுக்கு முன்பு நானும் நீரும் ஒரே நூரால் படைக்கப்பட்டோம். ஆதம் நபி படைக்கப்பட்டு பின் அந்த நூரானது அவரின் முதுகந்தண்டில் வைக்கப் பட்டது. அப்போதிலிருந்து பரிசுத்த மான நல்லோர்களின் முதுகந்தண்டு களுக்கு மாறியும், புண்ணியவதிகளான பெண்களின் கருவறைகளிலும் மாறி நமது பாட்டனார் அப்துல் முதல்லிப் அவர்களிடமிருந்து அந்த பேரொளி - பிரகாச ஜோதி என்னும் நூர் இரண்டு பங்காக பிரிந்தது. ஒன்று எனது தந்தை அப்துல்லாஹ்வின் மூலம் நானும், மற்றொன்று உமது தந்தை அப்துல் முதல்லிப் அவர்கள் மூலம் நீருமாக ஜனித்தோம். நான் நபியாகவும், நீர் அலீயாகவும் - நான் கல்வியின் பட்டணமாகவும், நீர் அதன் வாயிலாகவும், வீரத்தின் விளைநிலமா கவும் மேன்மைபடுத்தப்பட்டோம். எல்லாம் வல்ல அல்லாஹ் தனது திருநாமங்களைக் கொண்டு சங்கைப் படுத்தினான். அவனின் திருநாமமான மஹ்மூதானதிலிருந்து என்பெயரை முஹம்மதாக்கினான். அவன் திருநாம மான அஃலாவிலிருந்து உம்மை அலீ ஆக்கினான்" என திருவுளமானார்கள்.

**ஆதாரம் : ஷிஃபா ஷரீஃப்.**

"மேலும் நபி ஆதம் மண்ணுக்கும் தண்ணீருக்கும் இடையிலிருக்கும் போதே நான் நபியாக அருளப் பட்டேன்" என்றார்கள். **ஆதாரம் :**
**புகாரி ஷரீஃப், மிஷ்காத் ஷரீஃப்**

மேற்கண்ட ரிவாயத்துகள் இந்த பூவுலகம் படைக்கப்படுவதற்கு முன்பே நுபுவத்தின் பேரொளியை வெளிப்படுத் திக்காட்டுகிறது என்றால், இந்த உலகத் தில் மீலாது-மௌலூது ரஸூல் அவர்கள் பிறப்பதற்கு ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறியப்பட்டுள்ளது.

**மதீனா ஷரீஃபின் தோற்றம் :**

மலிகுத் துப்பா என்கிற அரசர் தன்னுடைய படைபரிவாரங்கள் மற்றும் மார்க்க அறிஞர்கள் 400 பேரை தேர்வு செய்து எமன் தேசத்திலிருந்து தேச சஞ்சாரம் செய்யப் புறப்பட்டார். அக்கால அரேபிய தீபகற்பத்தில் இருந்த புனித தலங்களை ஜியாரத்து செய்தார். மேலும் மக்கத்துல் முகர்ரமாவில் இருக்கிற கஅபதுல்லாஹ்வை ஜியாரத்து செய்து முதன் முதலாக அந்த கஅபாவிற்கு கிலாஃபை போர்த்தி - புனிதங்கள் நிறைவேற்றி அங்கிருந்து புறப்பட்டு புனிதமிகு மதீனா உள்ள இடத்தில் பயண இடைவெளியில் தங்கியிருந்தார். பின்பு புறப்பட ஆயத்தமான போது அரசருடன் வந்திருந்த 400 உலமாக்களும் தங்கள் குடும்பத்தினருடன் இங்கேயே தங்கி விடுவதாகவும், அதற்கு அரசர் அனுமதிக்க வேண்டுமென்றும் விண்ணப் பித்துக்கொண்டனர். காரணத்தை அரசர் வினவிய போது நமது இறைவேத நூட்களில் கடைசி காலத்தில் இறுதி நபி மக்கத்தில் பிறப்பார்கள் என்றும், அங்கி ருந்து அவர்கள் ஹிஜ்ரத் செய்து இந்த புனித மதீனா ஸ்தலத்திற்கு வந்து தங்குவி டுவார்கள் என்றும் எழுதப்பட்டுள்ளது.

எனவே அந்த பூமான் நபியை வரவேற்பவர்களாகவும், அன்சாரிகளாக உதவி புரியும் பாக்கியம் பெற வேண்டும் என்றும் கூறினார்கள். இதைக் கேட்ட அரசர் அந்த உலமாக்களுக்கு தேவையான எல்லா உதவிகளையும் செய்து அதில் தலைவராய் இருந்த ஆலிம் அவர்களுக்கு இரண்டு மாடி வீடுகள் கட்டிக் கொடுத்து இறுதி நபியாம் முஹம்மத் முஸ்தஃபா ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் வருகை புரியும் போது அவர்களின் வாசஸ்தலமாக இந்த வீடு அற்பணிக்கப்பட வேண்டும் என்றும் ஒப்படைப்பது மட்டுமின்றி, பெருமானார் அவர்களுக்கு ஸலாம் கூறி, ஷஃபாஅத்தை வேண்டி, ஒரு கடிதத்தையும் எழுதி சமர்பித்து வாழையடி வாழையாய் நீங்களும், உங்கள் சந்ததியும் இதை பத்திரமாக வைத்து நபிகளார் வரும் போது ஒப்படைக்க

தொடர்ச்சி 16 ஆம் பக்கம் காண்க...



# أحاديث النبي صلى الله عليه وآله وسلم

## மாநபியின் மணிமொழிகள்

சிஹாசித்தா



### அஹ்லே பைத்து 12 இமாம்களும், முதல் இமாம் அலியாரின் மேன்மைகளும்...

சென்ற இதழில் எம்பெருமானார் கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் அஹ்லே பைத்து கிளையார்களாக 12 இமாம்கள் உலக அழிவு நாள் வரை வருவார்கள் என்றும் அதை ஏற்றுக் கொள்வது சுன்னத் வல் ஜமாஅத் அகீதா கொள்கை ஷரீஅத் சட்டத்திற்கு உட்பட்டதே என்று நிறுவி, பற்பல ஹதீதுகளில் முக்கியமான தாககருதப் படும் ரிவாயத்துகளை மட்டும் விரிவிற்கு அஞ்சி சுருக்கமாக வெளியிட்டிருந் தோம். இப்போது முதலில் அந்த பனிரெண்டு பேர்களின் பெயர் பட்டியலை கொடுத்து ஒவ்வொரு இமாம்மைப் பற்றி ஹதீது கிரந்தங்களில் வந்துள்ள அறிவிப்புகளையும், வரலாறுகளையும் இங்கே பார்ப்போம்.

**பனிரெண்டு இமாம்கள் :-**

அஹ்லே பைத்துகளில் இந்த பனிரெண்டு பேரும் யுதஹ்ஹிருக்கும் தத்ஹீரா என்ற பரிசுத்த ஆயத்தால் புனிதமாக்கப்பட்டவர்கள் என்பது ஏகன் இறைவனே நபிகளாரின் குடும்பத்தின் கிளையார்கள் பற்றி தித்திக்கும் திருமுறை குர்ஆன் ஷரீஃபில் அறிவித்த ஒன்றாகும்.

1. **ஹஜ்ரத் இமாம் அலீ** كرم الله وجه
2. **ஹஜ்ரத் இமாம் ஹஸன்** عليه السلام
3. **ஹஜ்ரத் இமாம் ஹுஸைன்** عليه السلام
4. **ஹஜ்ரத் ஜைனுல் ஆபிதீன்** عليه السلام
5. **ஹஜ்ரத் இமாம் பாகர்** عليه السلام
6. **ஹஜ்ரத் இமாம் ஜாபர் சாதிக்** عليه السلام
7. **ஹஜ்ரத் இமாம் மூஸா ரஜா** عليه السلام
8. **ஹஜ்ரத் இமாம் மூஸா காஜிம்** عليه السلام
9. **ஹஜ்ரத் இமாம் தக்கீ** عليه السلام
10. **ஹஜ்ரத் இமாம் நகீ** عليه السلام
11. **ஹஜ்ரத் இமாம் ஹஸன் அஸ்கரி** عليه السلام

மேற்கண்ட பதினோரு இமாம்கள் வருகை புரிந்துவிட்டார்கள் என்பது மறுக்க முடியாத ஆதாரங்கள் மூலம் நிருபிக்கப்பட்ட ஒன்று.

12. **ஹஜ்ரத் இமாம் மஹ்தி** عليه السلام அவர்கள் கியாம நாளின் இறுதி அடையாளங்களில் ஒன்றாக மக்கதுல் முகர்ரமாவில் பிறப்பார்கள். அவர்களைப் பற்றி பல சஹீஹான ரிவாயத்துகள் பதியப்பட்டுள்ளதை அவர்களின் வரலாற்றை தொகுத்தளிக்கும் போது பின்னால் நாம் குறிப்பிடுவோம். இப்போது முதலாவது இமாமாக போற்றப்படும் சையிதினா ஹஜ்ரத் இமாம் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களைப் பற்றி விரிவாக பார்ப்போம்.

**பெயர் :** சைய்யிதினா அலீ كرم الله وجه

**பெற்றோர் :** அபீதாலிப், ஃபாத்திமா (துணைவியார் பெயரும் ஃபாத்திமா)

**பிறந்த தேதி :** இஸ்லாத்திற்கு முன்னுள்ள அரேபிய இஸ்கந்திரிய ஆண்டுபடி 920 ரஜப் பிறை 27 ஞாயிற்றுக் கிழமை பிறந்தார்கள் என்றும், இது நபிகள் கோமான் அவர்கள் அன்னை கதீஜா பிராட்டியாரை மணந்த மூன்று ஆண்டுகளுக்கு பின் என்றும், அப்போது நபிகளாரின் வயது 28 ஆக இருந்தது என்றும் ஹஜ்ரத் முஹம்மத் பின் தல்ஹா ஷாஃபியீ அவர்கள் பல ஹதீதுகளையும், வரலாறுகளையும் ஆய்வு செய்து தமது அல் மதாலிபு மவுஸில் என்ற கிரந்தத்தில் பதிவு செய்கிறார்கள்.

**பிறந்த இடம் :** உலகில் எவரும் பிறந்திராத புனிதத் தலமாம் காபதுல்லாஹ்வின் உள்ளே பிறந்தார்கள். இப்பிறப்பு பற்றி இரண்டு ஹதீஸ்களை இங்கு பார்ப்போம்.

சையதுஷ் ஷுஹதா ஹஜ்ரத் செய்யிதினா இமாம் ஹுஸைன் அவர்களின் மகனார் ஹஜ்ரத் இமாம் ஜைனுல் ஆபிதீன் அவர்கள் ரிவாயத்து செய்கிறார்கள். நாங்கள் ஒரு முறை கர்பலா புனிதங்களை ஜியாரத்து செய்து கொண்டிருந்தோம். அங்கு பல பெண் மணிகள் இருந்தனர் அப்பெண்மணி களில் ஒருவர் எங்களை நோக்கி வந்தார். நாங்கள் அவரிடம் கேட்டோம் "நீங்கள் யார்?" அதற்கு அவர், "நான் பனீ சாயிதா கோத்திரத்தில் ஒருவள், என் பெயர் ஜைதா பின்த் அஜ்லான்!" என்றார். நாங்கள் அவரிடம் தாங்கள் அறிந்த விஷயங்களை எங்களுக்கு அறிவித்துத் தாருங்கள் என்றோம் அப்பெண்மணி கூறலாயினார்...

என்னிடம் ஒரு முறை அம்ரான் பின்த் ஃபுஜ்லா பின் மாலிக் பின் அஜ்லான் அஸ்ஸாபதி ரிவாயத் செய்தார்கள் நான் ஒரு நாள் காபதுல்லாஹ்வின் அருகில் மேன்மை மிக்க பெண்களின் கூட்டத்தில் இருந்தேன். அங்கு ஹஜ்ரத் அபூ தாலிப் (ஹஜ்ரத் இமாம் அலீயின் தந்தை) வருகை புரிந்தார்கள். அவர்கள் முகத்தில் கவலை ரேகைகள் தெரிந்தன நான் அவரிடம் ஏன் கவலையுடன் உள்ளீர்கள் என வினவினேன். அதற்கு அவர் என்னுடைய துணைவியார் ஃபாத்திமா பின்த் அஸத் அவர்களுக்கு பிரசவ வலியுண்டாகி உள்ளது என்றார்கள். பின்னர் ஃபாத்திமா பின்த் அஸத் அவர்களை தாங்கலாக அழைத்துச் சென்று காபதுல்லாஹ்வினுள் ஏக இறைவனின் பெயரை கூறிக் கொண்டி ருக்கும் படி கூறினார்கள். அது போது ஓர் அழகிய ஆண்குழந்தையை ஃபாத்திமா பின்த் அஸத் பெற்றெடுத்தார்கள். அக்குழந்தையைப் போன்ற அழகுள்ள குழந்தையை நாங்கள் கண்டதே இல்லை. நபிகள் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அங்கு வருகை புரிந்தார்கள். அலீ என அக்குழந்தைக்கு பெயரிட்டார்கள். தாயையும் சேயையும் அங்கிருந்து அழைத்துச் சென்றார்கள்.

இந்த ரிவாயத்தைக் கேட்ட இமாம் ஜைனுல் ஆபிதீன் கூறினார்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக இது போன்ற சிறப்பான செய்தியை நாங்கள் இதுவரை கேட்டதே இல்லை.

**(அல் ஃபகீயத் இப்னு முகாஜிலி ஷாபயீ தங்களுடைய மனாகிபில் பதிந்தது)**

**நபிகள் கோமான் அவர்கள் ஹஜ்ரத் அலீ அவர்களுக்கு பெயரிட்ட ரிவாயத்து :-**

கண்ணியம் நிறைந்த ஃபாத்திமா பின்த் அஸத் ரிவாயத்து செய்கிறார்கள். "நான் என் குழந்தை அலீயை நான்கு மாத கர்ப்பமாக சுமந்து கொண்டிருந்த போது எப்போதும் எங்கள் வீட்டிற்கு வருகை புரியும் நபிகள் கோமான் அவர்கள் தாயே தாங்கள் ஏன் பலகீனமாக காணப்ப டுகிறீர்கள்!" என்று வினவினார்கள். "நான் நான்கு மாத கர்ப்பமாகவுள்ளேன்" என்று கூறினேன். அப்போது அங்கு இருந்த என் கணவர் அபூ தாலிப் அவர்கள் கூறினார்கள் ஆண் குழந்தையாக பிறக்கும் பட்சத்தில் அவன் தங்களுக்கு அடிமை ஆவான், பெண் குழந்தையாக இருக்கும் பட்சத்தில் அவள் தங்களின் அடிமை பெண்ணாவாள் என்றார். எனக்கு ஆண்குழந்தை பிறந்த போது அக்குழந் தையை ஒரு துணியால் சுற்றி வைத்தேன் என் கணவர் அபூ தாலிப் கூறினார்கள், "ஹஜ்ரத் முஹம்மத் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் வராத வரை எவருக்கும் அக்குழந்தையை காட்ட வேண்டாம். அவர்கள் வந்து தமது அமானிதத்ததை பெற்றுக் கொள்ளட்டும்!" என்றார்கள்.

இத்தருணத்தில் பெருமானார் வருகை புரிந்தார்கள் குழந்தையை நபிகளார் தங்களின் கைகளில் ஏந்தி குளிப்பாட்டி **அலீ** எனப் பெயரிட் டார்கள். குழந்தையின் வாயிலே தமது உமிழ் நிரை இட்டார்கள். அந்தச் சுவையின் ஆனந்தத்திலே குழந்தை தூங்கிப் போனது. நாங்கள் (அக்கால வழக்கப்படி) பாலூட்ட செவிலித் தாயை ஏற்பாடு செய்தோம். ஆனால் பாலருந்தாத குழந்தை பெருமானாரின் உமிழ்நீரை உண்டே வளர்ந்தது.

**பில் உரவதல் உஸ்கா ஃபில் கஸாயிஸில் முர்துஜா** அத்தியாயம், அல் இமாமுல் ஃபகீஹ் அல் ஹுசைன் அல் காகி அவர்கள் தன் நூலான **அஸ்ஸலாபதி ஃபீ முஹப்பதில் சாஹாபதி**யில் மேற்கண்ட ஹதீஸைப் பதிந்துள்ளார்கள்.

அஹ்லே பைத்துக்களின் முதல் இமாம் ஹஜ்ரத் அலீ பிறந்தது காபாவில். பெயரிட்டது எம்பெருமான் நபிகள் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் ஆவார்கள்.

**இன்ஷா அல்லாஹ் மேலும் மொழிவோம்.....**

**பாபர் மசூதி வெளிவரும் உண்மைகள்...**
**பென்டகனும், CIAவும் முழிக்கும் பேய் முழிகள்...**
**மூன்றாம் உலகப் போர் மூட்டி ஆயுதம் விற்க இஸ்ரேல் – அமெரிக்கா நாடகமா...?**
**விக்கி லீக்ஸ் ஒரு சந்தேகப் பார்வை...!**
**பெயர்கள் மாற்றி புது இயக்கங்கள் தொடங்கும் வஹ்ஹாபிகள்...**
**ஒட்டகனாரின் ஸ்கூப் நியூஸ்...**

கடும் குளிரின் தாக்கம் எதையும் கண்டுகொள்ளாமல் அலட்சியமாக வந்த ஒட்டகனாரைப் பார்த்து "உமக்கு குளிர்அடிக்காதோ?" என்று நம் நிருபர்களின் இளைஞர் பட்டாளம் ஒட்டகனாரைச் சூழ்ந்து கொண்டது. "வட தேசத்தின் கடும் குளிரைக் கண்டு நடுங்காதவன் நான்! உங்கள் தமிழ் நாட்டு குளிர் எல்லாம் உஷ்ணமாக இருக்கிறது!" என்றார்.

நமக்கு வேண்டியது அவர் தரும் ஸ்கூப் நியூஸ் மட்டும் தான். அவருக்கு குளிர்ந்தால் என்ன? குளிராவிட்டால் என்ன என்று வேலூரில் பேட்டி எடுத்த நோன்ஜான் நிருபரை ஓரம் கட்டி காரியத்தில் கண்ணானோம்.

பாபரிப் பள்ளி பற்றி.... என்றதும், "இந்திய முஸ்லிம்களை இந்தியாவிற்கே எதிரான சக்தியாக மாற்ற பாக்கிஸ்தான் உளவு நிறுவனமான ISI எவ்வளவோ முயற்சித்தது. ஆனால் நாங்கள் இந்தியர் என்று ஒருங்கிணைந்து நின்றார்கள் இஸ்லாமியர்கள். பாபர் மசூதி இடித்தன் மூலம் ISI செய்ய முடியாததை B.J.Pம் RSSம் செய்து முடித்தன. இந்திய உளவு நிறுவனம் 'ரா'வின் முன்னாள் உளவு அதிகாரி ராமனின் வார்த்தைகள் இவை. உண்மைகள் எப்படி வெளிவருகிறது பார்த்தீரா...?" **ஆதாரம் : ஆனந்த விகடன் இதழுடன் இணைப்பு 10.03.2010**

"விக்கி லீக்ஸின் அதிரடி அறிவிப்புகளால் உலகிலேயே சிறந்த உளவு நிறுவனம் என சொல்லிக் கொள்ளும் அமெரிக்கCIAவின் தலைமையகமான பென்டகனும், அமெரிக்காவின் அனைத்து அரசு இயந்திரங்களும் பேய்முழி முழிக்கின்றன.

ஒபாமா என்ற அதிபர் அமெரிக்காவின் முகமூடி தான், அமெரிக்க நிர்வாகத்தின் ஒரிஜினல் முகமான யூதம் என்பது ஆபத்தானது என்பதை விக்கி லீக்ஸ் ஆதார ஆவணங்கள் மூலம் அம்பலப்படுத்தியது. அதை விட கேவலமாக, சின்னஞ்சிறு நாடான கரீபின் தீவு முதல் தனது பெரிய எதிரியான சீனாவரை எல்லா நாடுகளிலும் குழப்பத்தை உண்டாக்கும் சூழ்ச்சியை அமெரிக்க தூதரகங்கள் மேற்கொண்டு இருப்பதும் அம்பலமாகி உள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் நிரந்தர உறுப்பினராக விரும்பும் இந்தியாவிற்கு எதிராக காய் நகர்த்தும் வேலைகளை அமெரிக்கா செய்து வருவது வெட்ட வெளிச்சமாகி உள்ளது. ஐ.நா. சபை பொதுச் செயலாளரில் தொடங்கி அங்கு முக்கிய பொறுப்பில் இருக்கும் அனைவரையும் உளவு பார்க்கும் வேலையும் நடந்து வருவதை விக்கி லீக்ஸ் வெளிப்படுத்தியுள்ளது. இதனால் உலக நாடுகள் அனைத்தும் அமெரிக்கா மீது கோபமும், சந்தேகமும் கொண்டுள்ளன. உலக நாட்டாண்மையின் உண்மை முகத்தை தோலுரித்தன் மூலமாக ஹீரோவாக உள்ள ஜுலியன் அசான்ஜேவை விட்டு வைக்குமா அமெரிக்க தீவிரவாதம். இல்லாதது பொல்லாததுகளை அசான்ஜே மீது இட்டுக்கட்டுகிறது. அவர் உயிருக்கு ஆபத்து இல்லாமல் இருக்க வேண்டும்" என்றார் ஒட்டகனார்.

"இந்த லட்சணத்தில் அமெரிக்க ஓநாய் இந்திய தேசியத் தலைமை ஆடுகளுக்கு நண்பனாமே!" என்றோம்.

"அமெரிக்காவிற்கு சிகிச்சைக்குப் போயிருக்கும் சவூதிய மன்னர் ஈரான் பற்றி சொன்ன செய்திகள் இந்த குளிர்காலத்தில் கூட வளைகுடா நாடுகளில் வெப்பமாக வீசுகிறது... சரி உமக்கு உலக கிரிமினல் தெரியுமா?" என்று கேள்வியைக் கேட்ட ஒட்டகனாரை முறைத்துப் பார்த்தோம்.

நம் முழியைப் பார்த்து புரிந்து கொண்டவர், "அமெரிக்காவும், அதன் அதிகாரிகளும் தான்! நான் சொல்லவில்லை. *24.10.2010* ஆனந்த விகடனில் அருந்ததி ராய் சொல்வதைப் பாரும்!"

"இரட்டை கோபுரத் தாக்குதலின் போது ஒசாமா பின்லேடன் ஜார்ஜ்புஸ் இருவருமே கிரிமினல்தான். ஒரே ஒரு வித்தியாசம் பின்லேடனை மக்கள் யாரும் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கவில்லை!" என்று இவர் வெளியிட்ட கருத்து பலரையும் அதிர்ச்சியுடன் திரும்பிப் பார்க்க வைத்தது. *2006*ம் வருடம் ஜார்ஜ் புஸ் இந்தியா வந்த போது War Criminal என்று சாடி கட்டுரை எழுதினார் ராய். "என்ன ஒரே அமெரிக்க அடாவடி புராணமாய் இருக்கு?" என்று பேச்சை மாற்றினோம். விடாதவர் "இவ்வளவும் மூன்றாம் உலகப் போர் மூண்டு தம் ஆயுதங்கள் விற்று பொருளாதாரம் உயர அமெரிக்காவின் நாடகமா என்ற சந்தேகமும் எனக்கு உண்டு..." என்றார். "அது எப்படி...?" என்றோம். "ஈரான் அதிபர் நிஜாதியின் பேட்டியை எழுத்தாளர் பாரூக் மீரான் சுட்டிக் காட்டுவதைப் பாரும்!" என்றார் ஒட்டகனார்.

இந்த ஆவணங்கள் கசியவிடப்படவில்லை. இவை ஓர் ஒழுங்கமைப்பில் வெளியிடப்பட்டுள்ளன. இவைகளை வெளியிட்டதே அமெரிக்க அரசுதான். இதன் மூலம் அமெரிக்கா விரும்பும் அரசியல் மாற்றங்கள் எதுவும் நிகழப்போவதில்லை. மேலும், வளைகுடா பகுதியில் உள்ள அனைத்து நாடுகளும் நல்ல நட்புறவுடனேயே உள்ளன. இந்த ஆவணங்கள் வெளியிடப்படுவதன் மூலம் நட்பு நாடுகளிடையே உறவு பாதிக்கிறது. ஈரானை மனோ ரீதியாக பலவீனமடையச் செய்யும் அமெரிக்காவின் போர் தந்திரமே இது என பதிலளித்துள்ளார்...

நிஜாதியின் இப்பதில் சாதாரணமான ஒன்றல்ல. நாம் நன்றாக கவனிக்க வேண்டிய இடமும் இது தான். விக்கி லீக்ஸின் கசிவுகள் குறித்து நாம் சிந்திக்க வேண்டிய மற்றொன்று கோணம் இங்கிருந்தே துவங்குகிறது. தற்போது பொருளாதார விழ்ச்சியில் இருக்கும் அமெரிக்கா தன்னை ஸ்திரப்படுத்திக்கொள்ள எத்தகைய இழி செயலுக்கும் இறங்கும் என்பதை ஜான் பெர்கின்ஸ் எழுதிய 'ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம்' என்ற புத்தகத்தை படிப்பவர் எவரும் எளிதில் விளங்க முடியும்.

இந்த ரகஸியங்கள் வெளியிடப்படுவதன் மூலம் மீண்டும் ஓர் உலகப்போரை அமெரிக்கா விரும்புகிறதா? அல்லது மத்திய கிழக்கிலும், ஆசியாவிலும் உள்ள அண்டை நாடுகள் தம்மிடையே ஏற்படும் பகை உணர்வு காரணமாக ஆயுதங்களை வாங்கி குவிக்கத் துவங்குமேயானால் அதன் மூலம் பரம்பரை ஆயுத வியாபாரியான அமெரிக்கா அனைத்து நாடுகளுக்கும் ஆயுதம் விற்றே தன் பொருளாதாரத்தை வலிமைப்படுத்த நினைக்கிறதா? இதற்காகத்தானா

இத்தகைய கசிவுகள்? என்ற கேள்விகள் எவ்வித அடிப்படை ஆதாரமுமற்றது என்றாலும், எவராலும் அலட்சியப்படுத்தவே முடியாத ஒன்று . மேலும், ஈரான் மீது போர் தொடுக்க அரபு நாடுகள் நிர்ப்பந்திக்கின்றன என்ற கூற்றையொட்டி யோசிப்போமேயானால் பாலஸ்தீனில் இஸ்ரேல் புரிந்து வரும் கொடுஞ்செயல்களை உலகமே நன்கறியும். இஸ்ரேலின் தற்போதைய ஒரே இலக்கும் ஈரான் தான்.

ஏனைய அரபு நாடுகளெல்லாம் ஈரான் குறித்து பேசும் போது இஸ்ரேல் ஒரு வார்த்தை கூடவா அமெரிக்காவிடம் பேசவில்லை? எனில் வெளியான இத்தனை ஆவணங்களில் ஏன் அது குறித்தோ, அல்லது இஸ்ரேல் குறித்தோ ஒன்றும் இல்லை. இதன் மூலம் ஈரான் தனிமைப் படுத்தப்படுமானால் இஸ்ரேலுக்கே லாபம் என்பது குழந்தைகள் கூட நன்கறிந்த விஷயம்.

மேலும், விக்கி லீக்ஸ் வெளியிட்டுள்ள ரகசியங்களால் அதிக அளவு பலனடையப்போவது இஸ்ரேல் தான் என்று துருக்கியின் உள்துறை அமைச்சர் பஷீர் அதாலேயின் கருத்தும் இங்கு நினைவு கூரத்தக்கது. இத்தகைய சிந்தனைப் பின்னணியில் விக்கி லீக்ஸ் குறித்து யோசிப்போமேயானால் அதன் நம்பகத் தன்மை பெரும் கேள்விக் குறியாய் நம்முன் எழுவதை தவிர்க்க இயலவில்லை.

**ஆதாரம் : ச.ம.ச. பக் : 35,36...**

சில வருடங்களுக்கு முன்பு பாப்புலர் பிரெண்ட்ஸ் ஆப் இண்டியா என்ற ஓர் அமைப்பு சுதந்திர நாளில் இந்தியாவுக்கு சல்யூட்ன்னு உதித்தது. அப்பவே எனக்கு சந்தேகம். இது தேவ்பந்தி அமைப்பு தான் என்று. ஆனா யாரும் நம்பவில்லை.

புதிய பெயரில் சிமி பயங்கரவாத அமைப்பு என்று 13.12.2010 நாளிதழ்களில் செய்தி வந்திருக்கு. பார்த்தா அதே தேவ்பந்திய வஹ்ஹாபிகள் தான் என்று இன்வஸ்டிகேஷன் செய்து போட்டுள்ளார்கள். இந்த வஹ்ஹாபிகள் பல ரூபங்களில் வருகிறார்கள். மக்கள் உஷாராய் இருந்து சூஃபியாக்கள், அவுலியாக்கள், தர்காக்கள், பாதையில் நடக்கனும் என்ற உபதேசத்துடன் நாம் கொடுத்த சூடான சாயாவை குடித்து விட்டு டில்லிக்குப் போவதாக நடையைக் கட்டினார் ஓட்டகனார்.

---

# வலிமார்கள் பேசுகிறார்கள்...!
# மலை நடந்த வரலாறு...!!

***தொகுப்பு:- ஆலே ரஸூல் அவ்லாதே கௌஸுல் அஃலம் ஷாஹ் ஸெய்யது சர்கார் அல் ஹஸனி வல் ஹுசைனி குல்ஷனே சிஷ்த் - கோவளம் தர்கா ஷரீஃப்...***

***அல்லாஹ் முஹம்மத் சார்யார்***
***ஹாஜி காஜா குதுப் ஃபரீத்***
***ஹக் ஃபரீத்! யா ஃபரீத்!***
***ஹக் ஃபரீத்! பாபா ஃபரீத்!***

ரப்புல் ஆலமீனாகிய அல்லாஹ் சுபுஹானஹுத்த ஆலாவின் அளவிலா அருட்பெரும் ஜோதியாம், ஆலங்களுக்கெல்லாம் மூலாதி மூலமாக முஹம்மது முஸ்தஃபா ரஸூலுல்லாஹி ஸல்லல் லாஹுத் தஆல அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் ஒப்பற்ற உயர் மஹா தெய்வீக திருநாவால் திருவாய் மலர்ந்தருள் செய்கிறார்கள், **சிராஜு அஹ்லில்ஜன்னா** உமர் இப்னு கத்தாப். சுவர்க்கவாதீகளின் ஒளிவிளக்கு கத்தாபுடைய மகனார் உமர் ஆவார். இவ்வாறு அஸ்ஹாபுல் எமீன் அதாவது வலது சாரிகள் எனும் சுவர்க்கவாதீகளின் ஒளிவிளக்காய் ஒளிரும் அமீருல் மூமினீன் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் புனித பாரம்பரியத்தில் தோன்றிய ஆத்ம மஹாஜோதி ஆவார்கள். குத்பே பஹ்ரோ பர் பாபா ஃபரீத் கஞ்ஜஷக்கர் சுல்தானுல் ஹிந்த் அதாயே ரஹூல் காஜாயே காஜஹான் ஹுஜூர் காஜா முயீனுத்தீன் அல் ஹுஸைனி சிஷ்தி சும்ம அஜ்மீரி ஆண்டகை அவர்களின் அருந்தவ ஞான சிஷ்யரும், முதல் கலீஃபாவுமாகிய குத்புல் அக்தாப் காஜா குத்புத்தீன் பக்தியார் காகி அல் ஹுஸைனி சிஷ்தி சும்ம தெஹல்லவி நாயகம் அவர்களின் பிரதம கலீஃபாவும், மஹ்பூபே இலாஹி காஜா நிஜாமுத்தீன் அவுலியா மஹ்தூம் ஆலம் மஹ்தூம் அலாவுத்தீன் அலி அஹமத் ஸாபிரி நாதாக்களின் மெய்ஞானத் தந்தையும், பீரோ முர்ஷிதும் ஆவார்கள், குதுபே பஹ்ரோ பர் பாபா ஃபரீத் கஞ்ஜஷக்கர் சுல்தானுல் ஆரிஃபீன் இப்றாஹிம் இப்னு அத்ஹமல் பல்க் ரஜியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய முரீதுகளோடு மதீனா முனவ்வராவில் இருக்கும் உஹது மலையின் மீது அமர்ந்து கொண்டு சொன்னார்கள்...

இப்பொழுது இந்த மலையை நடந்து செல் என்று சொல்வேனேயானால் இம்மலை நடக்க ஆரம்பித்து விடும் என்று சொன்ன மாத்திரத்தி லேயே உஹதுமலை நகர ஆரம்பித்து விட்டது. இதை உணர்ந்த ஷைக் அவர்களின் முரீதுகள் நாயகமே! உஹதுமலை நகர ஆரம் பித்துவிட்டது என்று சொன்னார்கள். உடனே ஹஜ்ரத் இப்றாஹிம் இப்னு அத்ஹமல் பல்க் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உஹது மலையைப் பார்த்து நான் உனக்கு கட்டளை இடவில்லை நகரும்படியாக! ஆகவே நில் என்று கூறினார்கள்.

**கௌஸுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி ஆண்டகை அவர்கள் திருவாய் மலர்ந்தருள்கிறார்கள்...**

**லௌஹுல் மஹ்ஃபூல் என்னும் படைப்பினங்கள் அனைத்தின் தலைவிதியும் பதிவு செய்யப்பட்டுள்ள பலகையின் தலைவிதி குதுபுமார்களின் நாவில் இருக்கிறது. அல்லாஹ்வின் ஒரு குதுபு நினைப்பாரேயானால் லௌஹையும் அவர் நகர்த்தி விடுவார் என்பதாக. எஜமான் அவர்கள் கூறுகிறார்கள்.**

அந்த உயரிய மக்காமை பெற்றுள்ள அல் குதுபுல் அஃலம் சுல்தானுல் ஆரிஃபீன் அமானுல் அர்ள் சுல்தான் இப்றாஹிம் இப்னு அதஹமுல் பல்க் நாயகம் அவர்களின் ஆறாவது ($6^{th}$)தலை முறை பேரராக தந்தை வழியிலும், தாய் வழியிலும் ஒப்பற்ற உயர் மஹாசங்கை மிக்க ஸைய்யது சாதாத் ஹுஸைனி நஸபுதைய்யிபாவிலும் கீர்த்திமஹா சக்திமிக்க சிஷ்தியா தரீகாவில் சர்குரு நாதராகவும் திகழும் காஜா பாபா ஃபரீத் கஞ்ஜஷக்கர் பாக் பட்டான் ஷரீப் ரஜியல்லாஹு அன்ஹு அவர்களின் சங்கைமிகு உரூஸ்முபாரக் முஹர்ரம் பிறை 5ம் நாள் ஆகும்.

இத்தினத்தில் ஹுஜூர் சர்கார் காஜா பரீருத்தீன் கஞ்ஜ ஷக்கர் அவர்களின் வஸீலா ஜமீலாவை நாடி இருலோக வாழ்விலும் ஈடேற்றும் பெறுவோமாக!

ஆமீன் ! யாரப்பல் ஆலமீன்! பிஜாஹி ஸைய்யதில் அன்பியாயி வல் முர்ஸலின் வ அலா ஆலிஹில் பரரத்தில் கிராமி வ அஸ்ஹாபிஹில் கைரத்தில் இலாம்.

# இஸ்லாமிய மார்க்க சட்ட விளக்கங்கள்...!

مُنْيَةُ الْمُصَلِّيْ

மார்க்க சட்ட விளக்கங்கள் என்னும் தலைப்பில் வரும் இப்பகுதி ஹனஃபி மஜ்ஹபில் முக்கியமாக கருதப்படும் முன்னியத்துல் முஸல்லி என்ற தொழுகை வழிகாட்டி நூலின் மொழிப் பெயர்ப்பாகும். இது எல்லோருக்கும் பயன்தரும் என்றாலும் குறிப்பாக உலமாக்கள், மதரஸா மாணவர்கள் அரபி சொற்றொடர்களை கோர்வை செய்து படிப்பார்களேயானால் அசல் நூலான முன்னியத்துல் முஸல்லியின் மத்தன் இபாரத் கிடைக்கப்பெறுவார்கள். (ஆ-ர்)

فَلَمَّا رَأَيْتُ رَغْبَةَ الْمُقْتَبِسِيْنَ فِيْ تَحْصِيْلِهَا

தொழுகையின் மஸ்அலாக்களை விளங்கிக்கொள்வதில் ஆர்வமுடையவர்களைக் கண்ட போது,

اِلْتَقَطْتُ مَا كَثُرَ وُقُوْعُهُ وَمَا لَا بُدَّ لَهُمْ مِنْهُ مِنْ مُصَنَّفَاتِ الْمُتَقَدِّمِيْنَ وَمِنْ مُخْتَارَاتِ الْمُتَأَخِّرِيْنَ نَحْوِ الْهِدَايَةِ وَالْمُحِيْطِ وَشَرْحِ الْاِسْبِجَابِيِّ وَالْغُنْيَةِ وَالْمُلْتَقَطِ وَالذَّخِيْرَةِ وَفَتَاوٰى قَاضِيْخَانْ وَجَامِعِيْهِ

அதிகமாக நடைபெறும் சம்பங்களையும், அவசியமானவைகளையும் ஹிதாயா, முஹீத், ஷரஹுல் இஸ்பீஜாபீ, குன்யா, முல்தகித், தகீரா, பதாவா காஜிகான், ஜாமிஉஸ் ஸகீர், ஜாமிஉல் கபீர் போன்ற முன்னோர்கள், பின்னோர்களின் முக்கியமான நூற்களில் இருந்து எடுத்து எழுதியுள்ளேன்.

وَسَمَّيْتُهُ مُنْيَةَ الْمُصَلِّيْ وَغُنْيَةَ الْمُبْتَدِيْ

முன்யதுல் முஸல்லி வ குன்யதுல் முப்ததீ (தொழுவோருக்கு தேவையான அதி முழுமையான மஸ்அலாக்களை தெளிவுபடுத்துதலும், ஆரம்ப மாணவர்களின் தேவையை புரிந்து செய்தலும்) என பெயரிட்டேன்.

وَاَسْأَلُ اللّٰهَ اَنْ يَّجْعَلَ مَا اعْتَمَدْتُهُ خَالِصًا لِّوَجْهِهِ

நான் நாடியவைகள் அல்லாஹ்வின் திருப்பொருத்தமுடையதாக ஆவதற்கு அவனிடமே வேண்டிக் கொள்கிறேன்.

மறுமையில் கேவலத்தை ஏற்படுத்தக் கூடியதும், அமல்களில் நன்மைகளை போக்கக் கூடியதுமான ஷிர்க்கு ஃகபியிலிருந்தும், முகஸ்துதி, பெருமை, தலைமைப் பதவி, பொருள் இவைகளைத் தேடுவதிலிருந்தும் வேறு சில உபகார காரியங்களினால் கலக்கப்படாத முறையில் அடியார்கள் பலன் பெறுவதும், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவது தான் நோக்கம்.

مُكَفِّرًا لِذُنُوْبِيْ بِفَضْلِهِ

அவனது கிருபையால் எனது பாவத்தை நீக்குவதற்காகவும் அவனிடமே வேண்டுகிறேன்.

தன்னுடைய அமல்களினால் எவரும் சுவர்க்கத்தில் புக முடியாது. மாற்றமாக அல்லாஹ்வின் கிருபையினால் தான் சுவர்க்கம் புகுவர் என நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

وَاَنْ يَّغْفِرَلِيْ وَلِوَالِدَيَّ وَلِاُسْتَاذِيَّ

எனது பாவங்கள், எனது பெற்றோர்களின் பாவங்கள், எனது ஆசரியர்களின் பாவங்களையும் நீக்க அவனிடமே வேண்டுகிறேன்.

وَهُوَ الْمُوَفِّقُ لِلسَّدَادِ وَمِنْهُ الْهِدَايَةُ وَالرَّشَادُ

அவனே நேர்வழிக்கு அருள் புரியவோன். நல் வழி காட்டுவோன். உண்மையின் பால் நிலைத்திருக்க செய்தல் என்பதும் அவன் கைவசமே உள்ளன.

اِعْلَمْ بِاَنَّ الصَّلٰوةَ فَرِيْضَةٌ

தொழுகை கட்டாயக் கடமை என்பதை அறிந்து கொள்.

நலவான காரியங்களுக்கு துஆ செய்தலே ஸலாத் என்று அகராதியில் கூறப்படும். கிராஅத், ருகூ, ஸஜ்தா இவைகளுள்ள வணக்க வழிபாட்டிற்கு ஸலாத் என்ற பதத்தை மார்க்க அடிப்படையில் கையாளப் படுகிறது.

**கடமை...**

1. ஒவ்வொருவரும் நிறைவேற்றுதல் அவசியம். **பர்லுல் ஐன்** எனவும்
2. சிலர் நிறைவேற்றுவதினால் அனைவரின் பொறுப்பும் நீங்கிவிடும் என்ற முறையில், **பர்லுல் கிஃபாயா** எனவும் இரு வகைகளாகும்.

தொழுகை முதல் வகையைச் சார்ந்ததாகும்.

ثَابِتَةٌ بِالْكِتَابِ وَالسُّنَّةِ وَاِجْمَاعِ الْاُمَّةِ

குர்ஆன், ஹதீஸ், இஜ்மாவு இவைகளினால் (ஒவ்வொருவருக்கும் கடமையென) உறுதி செய்யப்பட்டு விட்டிருக்கிறது.

**குர்ஆன்...**

அல்லாஹு தஆலா விடமிருந்து ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் மூலம் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கட்கு அருளப் பெற்ற வேத நூலாகும்.

**ஹதீஸ்...**

குர்ஆனின் வாசகமின்றியுள்ள நபியவர்களின் சொல், செயல், நடைமுறைகளாகும்.

**இஜ்மாவுல் உம்மா...**

முன்னோர்கள், பின்னோர்கள் தேர்ச்சி மிக்க கல்வியாளர்களின் ஏகோபித்த முடிவு.

اَمَّا الْكِتَابُ فَقَوْلُهُ تَعَالٰى اَقِيْمُوا الصَّلٰوةَ

குர்ஆனின் ஆதாரங்களாகிறது :-

அதுவே அல்லாஹ்வின் சொல்லாகும். தொழுகையை நிறைவேற்றி வருங்கள். **(குர்ஆன் - 2:110)**

قُوْمُوْا لِلّٰهِ قَانِتِيْنَ اَىْ صَلُّوْا لِلّٰهِ قَائِمِيْنَ

(தொழுகையில்) அல்லாஹ்விற்கு பயந்து மிக்க உள்ளச்சத்தோடு நில்லுங்கள் **(குர் ஆன்- 2:238)**

حَافِظُوْا عَلَى الصَّلَوَاتِ وَالصَّلٰوةِ الْوُسْطٰى

(ஐங்காலத்) தொழுகைகளையும் மத்தியத் தொழுயையும் (நேரந் தவராமல் தொழுது) பேணிக் கொள்ளுங்கள்.

ஸலவாத்துல் உஸ்தா மத்தியத் தொழுகை அஸருடைய தொழுகை என ஹஜ்ரத் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள். இரவுக்கும், பகலுக்கும் இடைப்பட்ட நேரமான ஃபஜர் தொழுகையை மத்திய தொழுகை என ஹஜ்ரத் மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் முஅத்தா என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். பகலின் மத்திய நேரத்திலுள்ள லுஹர் தொழுகையை மத்திய தொழுகை என ஹஜ்ரத் அபூ ஹனீஃபா, ஜுபர் (ரஹ்மதுல்லாஹி அலைஹிமா) இவ்விருவரும் கூறுகின்றனர். சப்தமிட்டு ஓதுகின்ற தொழுகைகளுக்கும், இரைந்தோதாமல் ஓதுகின்ற தொழுகைகளுக்கும் மத்தியிலுள்ள மக்ரிப் தொழுகையே மத்தியத் தொழுகை என்றும், இரைந்தோதுகின்ற இரு தொழுகைகளுக்குமிடையில் உள்ள இஷாத் தொழுகையை மத்தியத் தொழுகை என வேறு சிலரும் குறிப்பிட்டுள்ளார்கள்.

சுருங்கக் கூறின், ரமளானின் லைலத்துல் கத்ரு என்ற இரவை மறைக்கப்பட்டிருப்பதைப் போன்று மத்தியத் தொழுகையும் மறைக்கப்பட்டுள்ளது.

**இன்ஷா அல்லாஹ்! இன்னும் விளங்குவோம்.....**

## மீலாது சிறப்புக் கட்டுரை...!

# இங்கும் முஹம்மத்...! ﷺ அங்கும் முஹம்மத்...!! ﷺ எங்கும் முஹம்மத்...! ﷺ எதிலும் முஹம்மத்...!! ﷺ

உருது மூலம் : ஹகீமுல் உம்மத் அஹ்மத் யார் கான் ரஹ்மதுல்லாஹி அலைஹி, நூல் : ஷானே ஹபீபுர் ரஹ்மான் & மிர்ஆத்
தமிழில் : மௌலவி முஹம்மத் காஸிம் மஹ்ளரி, கலீஃபா ஹல்லாஜியா தர்கா, இமாம் ஏழு லெப்பை பள்ளி நாகூர் ஷரீஃப்.

من عظم مولدی کنت شفعا له يوم القيمة (الحديث)

**மன் அஜ்ஜம மவ்லிதி குன்து ஷஃபீஅல்லஹு யவ்மல் கியாமஹ் -அல் ஹதீஸ்**

"எனது பிறப்பை சிறப்பித்த வருக்கு கியாமத் நாளில் நான் பரிந்துரைப்பேன்!" என்று குமுதவாய் திறந்து கூறிக்காட்டிய கோமான் நபிகள் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பிறந்த ரபீஉல் அவ்வல் திங்களை முன்னிட்டு இந்த மீலாது சிறப்புக் கட்டுரை மக்கள் மன்றத்தில் சமர்பிக்கப்படுகிறது. மேற்கூறப்பட்ட ஹதீஸ் பர்ஜன்ஜீ மௌலித் கிதாபின் விரிவுரை நூலான மதாரிஜுஸ் சுஊத்தில், 15வது பக்கத்தில் பதியப்பட்டுள்ளது.

அருள் மறை அல்-குர்ஆனை ஆரம்பம் முதல் கடைசி வரை ஆய்வு செய்தால் அல்ஹம்து முதல் அந்நாஸ் வரை அத்துணை ஆயத்துக்களும் அண்ணல் நபி ஹஜ்ரத் முஹம்மத் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் திருப் புகழை துதித்துக் கொண்டே உள்ளன. அது அல்லாஹ்வைப் புகழும் அல்ஹம்து ஸூராவாயினும் சரி, அல்லது பயான் மற்றும் கொள்கை தொடர்பான ஆயாத்துக்களானாலும் சரி, அல்லது முன்போந்த நபிமார்கள், நல்லோர்கள், பிற உம்மத்துகள் சம்பந்தப்பட்ட அல்லது ஹுக்மு எனும் இறை கட்டளை சம்பந்தப்பட்டனவாயினும் சரி குர்ஆனின் எந்த ஒரு வசனமும் ஹஜ்ரத் முஹம்மத் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மாப் புகழை உள்ளடக்கியுள்ளன.

### பெருமானாரின் புகழ்...

உதாரணமாக குல் ஹுவல் லாஹு அஹத் என்ற இக்லாஸ் ஸூரா வெளிப்படையில் அல்லாஹ்வின் உள்ளமையை வர்ணிக்கிறது. **தப்பத் யதா அபீ லஹப்** என்ற **லஹப் ஸூரா** வெளித்தோற்றத்தில் அல்லாஹ் மற்றும் ரஸூலின் எதிரிகளான அபூ லஹ்பையும் அவனது மனைவியையும் சபிக்கிறது. இவற்றின் உட்கருத்தை ஆழ்ந்து சிந்தித்தால் இவ்விரு ஸூராக்களின் பின்னனியில் பெருமானாரின் புகழ் தொக்கி நிற்கிறது.

**குல் ஹுவல்லாஹ் ஸூராவின் கருத்தாவது ;** நபியே அல்லாஹ் ஒருவன் அவன் எத்தேவையும் அற்றவன் அவன் யாரையும் பெற்றெடுக்கவில்லை. அவன் யாருடைய பிள்ளையும் இல்லை. அவனுக்கு எவரும் இணையில்லை ; என்பதாக, "என்னைப் பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள்!" என்று அல்லாஹ் சொன்னான்.

இந்த ஸூராவின் ஆரம்பத்தில் உள்ள '**குல்**' சொல்லுங்கள் எனும் சொல் தான் சுந்தர நபியின் சிறப்பை சொல்லிக் காட்டுகிறது.

அதாவது இறைவனின் நாட்டம் இப்படி உள்ளது...

எனது உள்ளமையை சொல்லும் இக்லாஸ் ஸூராவின் வாசகம் என்னுடையது. என்னை யார் என்று அடையாளம் காட்டும் நாவு உங்களுடையது. **லா இலாஹ இல்லல்லாஹ்** என்று நீங்கள் சொல்லுங்கள் **முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்** என்று நான் சொல்லுகிறேன்!

ஆக கலிமா தையிபாவில், நீங்கள் (நபிகளார்) சொன்ன வாசகம் முன்னதாகவும், நான் (அல்லாஹ்) சொன்ன வாசகம் பின்னதாகவும் இருக்கிறது.

இது எல்லாம் வல்ல அல்லாஹ் சொல்லாமல் சொல்கிற விளக்கமாகும். இத்தத்துவத்தின் அடிப்படையில் கலிமாவில், பாங்கில், இகாமத்தில், அத்தஹிய்யாத்தில், ஜும்ஆ & நிக்காஹ் குத்பாவில், பயான் அரங்குகளில் அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தம் அல்லி வாய் திறந்து சொல்லிக் காட்டிய சொற்றொடர் முன்னரும் அல்லாஹ்வின் சொற்றொடர் பின்னரும் அமைந்திருப்பது எங்கும் முஹம்மத் எதிலும் முஹம்மத் என்பதை பறை அறிவிக்கிறது.

அடுத்து **தப்பத் யதா** ஸூராவை பார்ப்போம்.

இந்த அத்தியாயமும் பூமான் நபியின் புகழையும் உள்ளடக்கி நிற்கிறது. **இக்லாஸ் ஸூரா**வின் ஆரம்பத்தில் இருந்த '**குல்**' எனும் சொல் நபியின் சிறப்பை சொன்னது. ஆனால் இந்த **தப்பத் யதா** ஸூராவோ '**குல்**' என்ற சொல் இன்றியே நபி அவர்களின் சிறப்பை சொல்வது சிந்திக்கத்தக்கது.

ஒரு முறை **ஸஃபா** மலையில் ஏறிய நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தம் உறவினர்களை ஒன்று திரட்டி சத்திய சன்மார்க்கப் பிரச்சாரம் செய்த போது அபூ லஹப் என்ற கொடியவன் கோமான் நபி அவர்களை நோக்கி முஹம்மதே! நீர் நாசமாக வேண்டும் (நவூதுபில்லாஹி மின் ஜாலிக்) என்று சொல்லி கையில் கல்லெடுத்து வீசினான். அப்போது அவனைப் பழிவாங்க அல்லாஹ் அபூ லஹ்பின் இரு கைகள் நாசமாகக் கடவது. அவனும் நாசமாவான் எனும் சூராவை வஹீயாக இறக்கினான்.

அபூ லஹப் - நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் தந்தையுடன் பிறந்த சகோதரனாவான். அவன் பெயர் அப்துல் உஸ்ஸா. பட்டப் பெயர் அபூ லஹப். அபூ லஹ்பும் அண்ணல் நபி அவர்களின் தந்தை ஹஜ்ரத் அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் ஒரே தந்தை அப்துல் முதல்லிப் அவர்களுக்கு பிறந்தார்கள். தாய் வேறு. அபூ லஹ்பின் தாய் பனீ பின்த் ஹாஜிரா என்பவராவார். ஹஜ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் தாய் ஃபாத்திமா பின்த் அம்ரு என்பவராவார். **(நூல்: தஃப்ஸீர் காஜின் & நூருல் இர்பான்)**

அபூ லஹப் அண்ணல் நபி அவர்களை திட்டிய போது - யா ரஸூலே! அவனுக்கு நீங்கள் பதிலிறுக்க வேண்டாம். நான் பதில் சொல்கிறேன் என்ற அடிப்படையில் இறைவனே வலியவந்து பதில் சொல்கிறான். இப்போது சொல்லுங்கள் இந்த ஸூராவின் உட்பகுதியில் உத்தமத் தூதரின் உயர் புகழ்தானே ஒளிந்துள்ளது.

### நேசிப்பதும்... எதிர்ப்பதும்...

من عادى لى وليا فقد اٰذنته بالحرب

**மன் ஆதி வலியன் ஃபகத் ஆஜன்னதஹு பில் ஹர்ப்**

"எனது நேசரைப் பகைப்பவன், என்னுடன் போர் புரிய நான் முழக்கம் செய்துவிட்டேன்!" என்று அல்லாஹ் சொன்னதாக அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள்

கூறியதை ஹஜ்ரத் அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

**(நூல்: புகாரி-மிஷ்காத், பக்:197)**

வலியுல்லாஹ்களை பகைப்பதே குற்றமெனில் நபிகளைப் பகைப்பது எவ்வளவு பெரிய குற்றம்.

இனி... அண்ணல் நபியின் கன்னல் குடும்பம் உத்தமத் தூதரின் சத்திய சஹாபாக்கள் மற்றும் மக்கா மதீனா, ஹிரா குகை, ஸவ்ர் குகை, உஹத் மலை போன்றவைகளை நாம் நேசிப்பதும், வாசிப்பதும், அந்தரங்கத்தில் அண்ணலார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை நேசிப்பதே ஆகும். அரசர்களின் ஏவலர்களையோ. அவர்களின் கிரீடத்தையோ புகழ்வது உண்மையில் அரசர்களை புகழ்வதேயாகும். அது போல் அபூ ஜஹ்ல், உத்பா, ஷைபா, தஸ்லீமா நஸ்ரீன், அஷ்ரஃப் அலீ தானவி, ரஷீத் அஹ்மத் கங்கோஹி, போன்றவர்களை நாம் வெறுப்பது அண்ணல் நபியின் மீது நாம் கொண்ட விருப்பத்தின்பாற்பட்டதே. ஏனெனில் இவர்கள் யாவரும் ஏந்தல் நபி அவர்களுக்கு அடிக்கடி எரிச்சலை ஏற்படுத்தியவர்கள்.

**திருமறையின் விரிவுரை மாநபி...**

மேலும் குர்ஆனில் அல்லாஹ் நம்மைப் பார்த்துச் சொல்கின்ற தொழுங்கள், ஜக்காத் கொடுங்கள், ஹஜ் செய்யுங்கள், போன்ற கட்டளைச் சொற்கள், வஹீகள் அனைத்தும் யதார்த்தத்தில் அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸலல்லம் அவர்களின் புகழைப்பாடுகின்றன. எப்படி என்றால் நீங்கள் தொழுங்கள், என்றுரைத்த இறைவன் எப்படித் தொழவேண்டும்? எப்போது தொழ வேண்டும்? எத்தனை ரக்அத்துகள், வக்துகள் என்று சொல்லவில்லை.

அது போல் ஜக்காத் யார் கொடுப்பது? யாருக்கு கொடுப்பது அதன் அளவென்ன? எனும் விளக்கமெல்லாம் கூறவில்லை. இவ்வாறே உம்ரா மற்றும் ஹஜ்ஜின் ஃபர்ளுகள், வாஜிபுகள், சுன்னத்துகள் யாவை என இறைவன் திருமறையில் விளக்கிக் கூறவில்லை.

"ஈமான் கொண்டவர்களே! இந்த கடமைகளை நீங்கள் எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதற்கு எனது ரஸூலின் செயலைப் பாருங்கள். சொல்லைக் கேளுங்கள்!" என்ற விளக்கத்தை இவ்வசனங்களினுள்ளே இறைவன் வைத்துவிட்டான்.

ஒரு மனிதன் ஒளூவுடன் இரு ரக்அத்துகள் அல்லது ஷாஃபி மத்ஹபின்படி குறைந்தது ஒரு ரக்அத் மட்டும் வித்ரு தொழுகிறான். ஆனால் கியாம் என்ற நிலையில் ஃபாத்திஹா ஓதாமல் அத்தஹிய்யாத்தும்-அத்தஹய்யாத் இருப்பில் ஃபாத்திஹாவும் ஓதி தொழுதால் அந்த தொழுகை கபூல் ஆகுமா? நிச்சயமாக அல்லாஹ் கபூல் செய்யமாட்டான். ஏனெனில் அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் எந்த இடத்தில் ஃபாத்திஹா ஓதினார்களோ அந்த இடத்தில் அதை ஓதாமல் அவன் வேறிடத்தில் ஓதினான். அதனால் அல்லாஹ் அதை கபூல் செய்யவில்லை. அது மட்டுமா? அத்தொழுகையை அவன் முகத்தில் தூக்கி வீசுவான்!

தொழுகையில் தக்பீர் கட்டியது முதல் கடைசி வரை அரபியில் ஓதுகிறோம். அல்லாஹ் தான் அனைத்து மொழிகளும் அறிவானே என்றெண்ணி ஒருவன் ஆங்கிலத்திலோ அழகு தமிழிலோ தொழுதால் தொழுகை கூடுமா? நிச்சயம் கூடா. அரபியில்தான் ஓதவேண்டும். காரணம் அரப் தான் அண்ணல் நபியின் கன்னல் மொழி.

இச்சையுடன் பழக்கப்பட்ட பச்சைக் கிளி, நாம் பேசுவது போல் தமிழில் பேசுவது கண்டு மகிழ்ச்சியடைவோம். கிளிகளுக்கு அந்த வார்த்தைகளின் பொருள் புரியாவிடினும் சரி. அது போல் அரபு மொழியின் அர்த்தம் நமக்கு புரியாவிட்டாலும், அண்ணல் நபி அவர்களின் மொழியை நாம் மொழிவதால் நம்மைப் பார்த்து அல்லாஹ் சந்தோஷப்படுகிறான். இவ்வாறே நமது எந்தச் செயல் நபிகள் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு நோவினை தருமோ அது தான் பாவச் செயல்.

وَالَّذِيْنَ يُؤْذُوْنَ رَسُوْلَ اللّٰهِ لَهُمْ عَذَابٌ عَلِيْم

அல்லாஹ்வின் தூதரை எவர்கள் நோவினை செய்கிறார்களோ அவர்களுக்கு வலி நிறைந்த தண்டனை உண்டு. **(அல் குர்ஆன் 9 :61)**

**நபியை நேசிப்பது இபாதத்து...**

ஒருவர் செய்யும் தவறை நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பொருந்திக் கொண்டால் அத் தவறு இபாதத் (வணக்கம்) ஆகிவிடும். உதாரணம் கைபர் எனுமிடத்தில் ஹஜ்ரத் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஜஹு அவர்களின் மடியில் தலை வைத்து தாஹா நபி அவர்கள் தூங்கிய போது ஹஜ்ரத் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஜுஹு அவர்களுக்கு அஸர் தொழுகை களாவாகி விட்டது. அது அல்லாஹ்வின் சிங்கம் அலீ அவர்களுக்கு இபாதத் ஆகும்.

தவ்ர் குகையில் ஹஜ்ரத் அபூ பக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மடியில் கோமான் நபி அவர்கள் கண்ணுறங்கிய போது, உயிர் போயினும் பரவாயில்லை. நபியின் தூக்கம் தொலைந்துவிடக் கூடாதென்று ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹ் அவர்கள், கருநாகம் தீண்டியபோதும் உயிர் காக்க முனையாதது பாவமில்லை. அது நிகர் காண இயலா இபாதத்தாகும்.

**நபியின் சொல் சட்டம்...**

ஒரு நாள் யாசகம் கேட்டு தன்னிடம் வந்த ஒருவருக்கு உழைப்பின் உணர்வை ஊட்டி கோடாரியில் கம்பைச் சொருகி "விறகு வெட்டி உழைத்து வாழ். 15 நாட்கள் வரை நான் உன்னை பார்க்கக் கூடாது. அதுவரை இங்கு வாராதே" என்று சொல்லி, வந்தவரை வள்ளல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் வழியனுப்பி வைத்தார்கள். அந்த ஸஹாபி கானகம் சென்று விறகு வெட்டி உழைத்து உயர்ந்தார். **(நூல் அபூதாஊத், இப்னு மாஜா மிஷ்காத் பக்கம் 163 அறிவிப்பு : ஹஜ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு.**

باب من لاتحل له المسئلة ومن تحل له مرآة

**பாபு மன்லா தஹல்ல லஹுல் மஸ்அலதி வ மன் தஹல்ல லஹு மிர்அ**

இந்த நபி மொழியின் விளக்கமாவது 15 நாட்களுக்கு அந்த மனிதர் ஜமாஅத்துடன் மஸ்ஜிதுன் நபவியில் தொழாமலிருப்பதற்கும், இடைகாலத்தில் வரும் ஜும்ஆவை விடுவதற்கும் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அனுமதி அளித்துவிட்டார்கள்.

صلوٰة فى مسجدى هذا خير من الف صلوٰة
فيما سواه الا

"எனது இந்த மஸ்ஜிதில் தொழுகின்ற ஒரு தொழுகை பிற பள்ளியில் தொழுகின்ற 1000 ரக்அத்துகளை விட சிறந்தது. கஃபாவைத் தவிர." என்று நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறியிருந்தும் கூட இந்த மனிதர் 15 நாட்களுக்கு அங்கு சென்று தொழுவது தடை செய்யப்பட்டது. மீறிச் சென்றால் அவர் பாவியாவார்.

அந்த ஸஹாபி அவர்கள் ஜும்ஆ உள்ளிட்ட பகல் தொழுகைகளை காட்டிலும் - இரவுத் தொழுகைகளை வீட்டிலும், தொழ வேண்டும். பொதுச் சட்டத்திலிருந்து விதிவிலக்காக தனி நபருக்கு, தான் நினைக்கும் விதத்தில் உத்தரவு இடும் உரிமை உத்தமத் தூதருக்கு உண்டு என்பதை இந்த ஹதீஸ் சுட்டிக் காட்டுகின்றது.

நபிகளாரின் மேன்மைகளை அறிந்து அவர்களுக்கு கண்ணியம் செலுத்தும் விதமாக நடந்து கொள்ளும் ஹிதாயத்தை அல்லாஹ் நம் அனைவர்களுக்கும் வழங்கி வழிகெட்ட வஹ்ஹாபிய தப்லீகர்களின் வழிகேட்டிலிருந்து அல்லாஹ் நம்மை பாதுகாத்தருள்வானாக. ஆமீன்!




قدیم خانخواہی مدرسہ دار العلوم لطیفیہ قطب ویلور کے ناظم محترم
حضرت مولانا مولوی شاہ محمد عثمان القادری
صاحب قبلہ.,M.A., P.Hd سے ایک گفت و شنید

# வேலூரின் 300 ஆண்டுகால பாரம்பரியமிக்க மதர்ஸயே லதீஃபியாவின் மேன்மை மிகு நாஜிம் சாஹிப் மௌலானா மௌலவி சையத் ஷாஹ் உஸ்மான் காதிரி அவர்களுடன் ஓர் நேர்காணல்...

தமிழகத்தில் அஹ்லே பைத்து சாதாத்து குடும்பத்தைச் சேர்ந்த பழம்பெரும் மதரஸாவாக பழங்கால கட்டட கலையில் நபிகள் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் உத்தரவு கிடைக்கப் பெற்று நிர்மாணிக்கப்பட்டது தான் தாருல் உலூம் லத்தீஃபியா ஆகும். தமிழகத்தின் தாய் மதரஸா என்று பெயர் பெற்ற பாகியாத்துஸ் ஸாலிஹாத்தின் நிறுவனர் அல்லாமா அப்துல் வஹ்ஹாப் ஹஜ்ரத் அவர்களே சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் இந்த மதரஸாவின் மாணவர் ஆவார். அவர் ஹைதராபாத்திற்குச் சென்ற பிறகு அவரை அழைத்து மார்க்க சேவையாற்றும் படி பணித்ததே லத்தீஃபியாவின் ஆலா ஹஜ்ரத் ஆவார். ( அப்படி வலிமார்களின் உத்தரவில் சுன்னத் வல் ஜமாஅத் மதரஸாவாக உண்டான பாகியாத் இன்று தேவ்பந்து வஹ்ஹாபிகளிடம் மாட்டிக் கொண்டது தனிக்கதை)

அந்த தாருல் உலூம் லத்தீஃபியாவின் ஆலா ஹஜ்ரத் குத்பே வேலூரின் பாரம்பரியத்தில் வந்து இன்று மதரஸாவின் நாஜிராக உள்ள மௌலானா மௌலவி சையத் ஷாஹ் உஸ்மான் காதிரி M.A., P.hd., அவர்களுடன் ஒரு நேர்காணல் பேட்டி தர்கா இதழ் வாசகர் பார்வைக்கு.... (ஆ____ர்)

**நிருபர் :** இந்த புனிதமான பழமைவாய்ந்த மார்க்க கல்வி நிறுவனத்தின் வரலாற்றுச் சுருக்கத்துடன் தங்களைப் பற்றியும் கூறுங்களேன்.

**கல்லூரி முதல்வர் :** இந்த மதரஸாவின் மூலராகிய ஹஜ்ரத் சையத் ஷாஹ் அப்துல் லத்தீஃப் காதிரி அவர்களின் சொந்த ஊர் பிஜாப்பூர். இவரின் தாய் தந்தை இரு வீட்டாரும் சையத்மார் குடும்பத்தைச் சேர்ந்தவராவர். ஹஜ்ரத் அவர்கள் இறைப் பணிக்காக சொந்த ஊரை விட்டு ஆற்காடு வழியாக ஹிஜ்ரி 1136ம் ஆண்டு தற்போது கம்பீரமாக தோற்றம் அளிக்கும் மதரஸாவின் பரந்து விரிந்த இந்த இடத்தை வந்து அடைந்தார்கள். அன்று இரவு அவரது கனவில் கண்மணி நாயகம் ரஸுலே கரீம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தோன்றி "அபுல் ஹஸனே...!" குறிப்பிட்ட இடத்தை காட்டி, "இந்த இடத்தில் மதரஸா கட்ட வேண்டும், இந்த இடத்தில் கான்கா கட்டவேண்டும்." என்று உத்தரவிட் டார்கள். அதன்படி மஹான் ஹஜ்ரத் அபுல் ஹஸன் அப்துல் லத்தீஃப் காதிரி பீஜாப்பூரி அவர்களும் மதரஸா மற்றும் கான்கா-தைக்காலை நிர்மாணித்தார்கள். அதன்பின் வாழையடி வாழையாக இப்போது 300 வருடமாக இந்த கான்கா மற்றும் மதரஸா நடந்து வருகிறது.

என் முழு பெயர் சையத் ஷாஹ் உஸ்மான் காதிரி M.A., P.hd., நான் 1981ஆம் ஆண்டிலிருந்து எனது குருவாகிய சையத் ஷாஹ் அபுல் ஹஸன் சத்ருத்தீன் முஹம்மத் காதிரி அவர்களின் காலம் தொட்டு முதல்வராக பணியாற்றி வருகிறேன். இன்ஷா அல்லாஹ் இந்த பணி தொடர்ந்து நடைபெறும். இந்த மதரஸாவின் நோக்கம் அல்லாஹ் மற்றும் ரஸுலுல்லாஹ் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் ஹக்கான மார்க்கத்தை மக்கள் சேவையாக சாந்தி சமாதானத்துடன் நிலைநாட்டுவதாகும்.

**நிருபர்:** இது தைக்கால் நடைமுறைகளைச் சார்ந்த கல்வி கேந்திரமாகும். இதன் ஷரீஅத் தரீகத் பணிகளைக் கூறுங்களேன்.

**முதல்வர் :** ஒரு தைக்கால் என்றால் அங்கு ஒரு பள்ளிவாசல் மற்றும் ஒரு கான்கா இருக்க வேண்டும். அம்முறைப் படியே இது நடைபெறுகிறது. இங்கு அஹ்லே பைத்து சந்ததிகளாக தொடர்ந்து 9 மஹான்கள் உள்ளார்கள். இவர்கள் மக்களிடம் இஸ்லாம் ஒரு புனித மார்க்கம் என்பதை எடுத்து விளக்கி இஸ்லாத்தை எத்தி வைத்தார்கள். மற்றும் இஸ்லாமியர்கள் அமைதி வழி நடந்திட பைஅத் கொடுத்து முரீத் ஆக்கினார்கள். "அனைவரையும் முரீத் ஆக்குவதா?" என்ற கேள்வி வந்தபோது அதற்கு மஹான் அவர்கள் சொன்னார்கள், "மக்கள் மார்க்கத்தை மறந்தவர்களாக வருகிறார்கள், என்னிடம் முரீத் ஆனதன் பின்னாவது என்னைப் பார்த்து இஸ்லாமிய நேர்வழியில் நடப்பார்கள் என்பதால் தான் எல்லோருக்கும் முரீது கொடுக்கிறோம்! மேலும் இந்த கான்காவில் உதவி தேடி வரும் மக்களை ஆதரித்து அவர்களுக்கு உதவி செய்கிறோம், அதிலும் இந்த மஹான்கள் மதவேற்றுமை பார்த்ததில்லை. பணக்காரர்களிடம் செல்லாமல் ஏழைகளின் அழைப்பை விரும்பி ஏற்றார்கள். நானும் அதையே கடைபிடித்து மார்க்கப் பணியாற்றுகிறேன்.

**நிருபர் :** இந்த அஹ்லே பைத்து குடும்பத்தில் பாதுகாத்து வைக்கப்பட் டுள்ள புனித சின்னங்களையும், மீலாது-மௌலூது, சலவாத்து, சலாம், ஃபாத்திஹா நடைமுறைகளைப் பற்றியும் கூறுங்களேன்.

**முதல்வர் :** இந்த கான்காவில் நான்கு புனித திருமுடிச் சின்னங்கள் உள்ளன. ஆம்! இந்த இடத்தில்,

1. ரஸுலுல்லாஹ்வின் புனித திருமுடி உள்ளது. அது ரபீயுல் அவ்வல் பிறை 12ம் தேதி மக்களின் தரிசனத்திற்காக வைக்கப்படும். அதை தரிசிக்க வேலூரில் உள்ள முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த அனைத்து மக்களும் வருகிறார்கள்.
2. நான்காம் கலீஃபா ஹஜ்ரத் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஜஹு அவர்களின் திருமுடி உள்ளது. அது ரம்ஜான் 20ஆம் தேதி அவர்களின் உருஸ் தினத்தில் மக்கள் தரிசனத்திற்காக வைக்கப்படும்.
3. ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் ரஜியல்லாஹு அன்ஹு அவர்களின் திருமுடி முஹர்ரம் 10ம் தேதி மக்களின் தரிசனத்திற்காக வைக்கப்படும்.
4. கௌஸுல் ஆஜம் முஹ்யித்தீன் எஜமான் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்களின் திருமுடி ரபியுல் ஆகிர் மாதம் பிறை 11ம் தேதி தரிசனத்திற்காக வைக்கப்படும்.

மற்றும் அனைத்து இஸ்லாமிய மாதங்களிலும் அந்தந்த மாதத்தில் அந்தந்த மஹான் பெயரில் ஃபாத்திஹா ஓதப்படும். மீலாது, மௌலூது, விழாக்களும் இந்த கான்காவின் பழமையான பாரம்பரிய முறைப்படி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**நிருபர் :** மதரஸா கல்வியின் நடை முறைகள் பற்றியும், இன்றைய நவீன உலகில் தீனின் (மார்க்க) கல்வியுடனே உலகக் கல்வி என்ற புதுமுறை எவ்வளவு

வெற்றியைத் தரும்...

**முதல்வர் :** இந்த மதரஸாவில் ஒவ்வொரு ஆண்டும், ஷவ்வால் பிறை 11-ம் தேதி இரண்டு மாத விடுமுறையாகிவிடும். மற்றும் இங்கு படிக்கும் மாணவர்களை நாங்கள் உலகக் கல்வி படிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதில்லை. எந்த மாணவர் உலகக் கல்வி படிக்க வேண்டும் என்ற ஆசைப்படுகிறாரோ, அவரை மட்டும் தான் நாங்கள் படிக்க வைக்கிறோம். அது மட்டும் அல்ல சில மாணவர்கள் சென்ற வருடம் டிரைவிங் கிளாஸ் போக வேண்டும் என்று கூறினார்கள் அதை நாங்கள் பூர்த்தி செய்தோம். ஆனால் ஒரு மாணவன் ஏதாவது ஒரு கல்வியை முழுமையாக கற்றுக்கொள்ள வேண்டும். அதில் பாதி இதில் பாதி என இருந்தால் அது சரியாக வராது. அந்த மாணவன் எதையும் முழுமையாக கற்றுக் கொள்ள முடியாது. மற்றும் அதனால் அந்த மாணவனுக்கு எந்தப் பயனும் இல்லை.

மேலும் படிக்கும் மாணவர்கள் இமாமத் செய்வதற்கும், ஜும்ஆ தொழுவதற்கும் தெரிந்தாலே போதும் என்று சென்றுவிடுகிறார்கள். பட்டமேற் படிப்பு போன்ற அனுபவக் கல்வியோ இருப்பதில்லை. அதிலும் எங்களது வலிமார்களின் கான்கா சம்பந்தப்பட்டி ருப்பதால் கித்மத் - மார்க்க சேவை மனப்பான்மையுடன் அனுபவம் பெற்றால் மிக்க நன்றாக இருக்கும். ஒரே நேரத்தில் மௌலவி படிப்பும், ஏனைய கல்வியும் கற்பது எதிலும் முழுமை இல்லாமல் போய்விடுகிறது என்பது என் கருத்தாகும்.

**நிருபர் :** தர்கா இதழுக்கு தங்களின் அறிவுரையும், இதழ் வாசகர்களுக்கு தாங்கள் கூறவிரும்புவதும்...

**முதல்வர் :** தர்கா இதழ் சிறப்பாகவுள்ளது. மக்களுக்கு இப்படி சேவை செய்வது பாராட்டுக்குரியது. இந்த பேட்டி மூலம் நம் சுன்னத் வல் ஜமாஅத் அகீதா கொள்கைப்படி மார்க்க ஆலிம் மௌலவி படிப்பு படிக்க நாடுவோருக்கு எங்களது மதரஸாவில் சேர்ந்து படிக்கவும், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை எங்களது 300 ஆண்டுகால பாரம்பரியமிக்க மதரஸாவில் சேர்க்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

## நன்றி நவிழல்...

நமது நிருபர் ஃபாஜில் அஹமது கான் நேர்காணலுக்காக பேட்டி எடுக்கச் சென்றபோது, தமது உடல் நிலை சரியில் லாத போதும் ஹஜ்ரத் நாஜிம் சாஹிப் கிப்லா அவர்கள் நேரம் ஒதுக்கித்தந்து சிறப்பானதோர் பேட்டி அளித்தமைக் காக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் அவர்கள் பூர்ணசுகம் பெற ஹஜ்ரத் குத்பே வேலூரின் வஸீலாவால் துஆ செய்கிறோம்.

**பின்குறிப்பு:-** வேலூர் லதீஃபியா மதரஸாவை தோற்றுவித்தோரின் மேன் மைகளையும் , ஆதாரப்பூர்வ வரலாற்றுச் செய்திகளையும் தெரிந்து கொள்ள SLNகல்லூரி முதல்வர், பேராசிரியர் Dr.S.R.**நடராஜன்** M.A.,M.Com.,M.Phil.,Ph.D., அவர்கள் மொழியாக்கம் செய்துள்ள **வேலூரின் இறைநேசச் செல்வர்கள்** என்ற வரலாற்று நூலை,

**மௌலான மௌலவி சையத் ஷாஹ்**
**உஸ்மான் காதிரி M.A., P.hd., அவர்கள்,**
**லத்தீஃபியா அரபிக் கல்லூரி,**
**25, ஹஜ்ரத் மக்கான், வேலூர்-632004**
என்ற விலாசத்திற்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

8 ஆம் பக்க தொடர்ச்சி...

வேண்டும் என்பதாய் கூறினார்.

**ஆதாரம் : இமாம் தர்கானி அவர்கள். ஷர்அ மவாஹிபே லதுன்யா பக்கம் 285**

மேற்கண்ட 400 உலமாக்களின் வம்சம்தான் சந்ததி சந்ததியாக 1000 ஆண்டுகளுக்குப் பின் மதீனத்தில் **தலஅல் பத்ரு அலைனா** என்று மௌலூது ஓதி தஃப்பு கொட்டி நபிகளாரை வரவேற்ற அன்சாரி சஹாபாக்கள் ஆவர். அந்த அன்சாரி சஹாபா தோழர்களின் தலைவராக இருந்தவர் தான் அபூ அய்யூப் அன்சாரி ஆவார்.

பெருமானார் எங்கு தங்க வேண்டும் என்ற வினா வந்த போது எல்லோரும் தங்கள் வீட்டிற்கு புனித நபியின் நல்வரவு இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட னர். பெருமானார் அமர்ந்து வந்த ஒட்டகையின் கயிற்றை விட்டுவிட ஒட்டகம் எந்த வீட்டின் முன் அமர்கிறதோ அந்த வீட்டில் பெருமானார் தங்குவார்கள் என்று முடிவெடுக்கப் பட்டது. அப்போது 1000 ஆண்டுகளுக்கு முன்னால் அரசர் கட்டித்தந்த புனித வீட்டில் போய் நின்றது அந்த ஒட்டகை. ஒட்டகை அமர்ந்த இடம் தலைவர் அபூ அய்யூப் அன்சாரி அவர்களின் மாடி வீடு.

### ஒட்டகையின் வமிசமும், கடிதமும்...

ஹிஜ்ரத்தின் போது நபிகள் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அமர்ந்து வந்த ஒட்டகை கூட நபி சாலிஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் காலத்தில் முஅஜிஜா - அற்புதத்தில் மலையிலிருந்து பாறை வெடித்து வெளிவந்த ஒட்டகையின் சந்ததியிலிருந்து உதித்த ஒட்டகை யாகும். எனவே தான் சாலிஹ் நபியவர் கள் ஒட்டகையை பற்றுதலோடு தானே மேய்ப்பார்களாம்.

தமது மூதாதையர்களின் வம்சாவழி முறைப்படி தலைவர் அபூ அய்யூப் அன்சாரி அவர்கள் பெருமானாருக்கு சேர்க்கப்பட வேண்டிய புனிதக் கடிதத்தை பாதுகாக்க வேண்டி முஜாவர் அபூ லைலா என்பவரை பணியாளராக நியமித்து இருந்தார். அந்த கடித்தை பெருமானார் அவர்கள் பரவசத்தோடு கேட்டுப் பெற்றார்கள் என்பதாக அல்லாமா அஹ்மது ஷைகுத்தீன் அப்துல் ஹமீது அல் அப்பாஸி அவர்கள் தமது புகழ் பெற்ற நூலான தும்ரத்துல் அஃபார் ஃபீ மதீனத்துல் முக்தார் என்ற நூலில் பதிவு செய்கிறார்.

இதன் மூலம் தெரிவது என்னவென்றால் ஆதம் நபி படைக்கப்படுவதற்கு முன்பே நபிகள் கோமான் நபித்துவம் பெற்று விட்டார்கள் என்பதும், அவர்கள் பிறப்ப தற்கு 1000 ஆண்டுகளுக்கு முன்பே புனித மதீனமாநகர் நிர்மாணிக்கப்பட்டுவிட் டது என்பதும் ஆதாரப்பூர்வமாய் தெளி வாகிறது. ஆகவே பிறந்து 40 ஆண்டுக ளுக்குப் பிறகு தான் பெருமானாருக்கு நபி என்னும் அந்தஸ்து கிடைக்க வில்லை. மாறாக உலகில் நபி என பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது 40 வது வயதில்.

எல்லாம் வல்ல அல்லாஹ் புனித மௌலூது மாதத்திலே நபிகளாரின் நிரப்பமான முஹப்பத்தை நம் நெஞ்சங்க ளில் தந்து இம்மையிலும், மறுமையிலும் ஷஃபாஅத்து அளிப்பானாக. ஆமீன்! யா ரப்பல் ஆலமீன்!! பி ஜாஹே சையதுல் முர்ஸலீன் வ அவ்லியாயே வாஸிலீன்!!!

**கான்காயே ஹஜ்ரத் குத்பே வேலூர் - தாருல் உலூம் லத்திபியா அரபிக் காலேஜின் நாஜிரான முதல்வர் மேன்மை மிகு சையத் ஷா உஸ்மான் காதிரி சாஹெப் கிப்லா அவர்கள் தர்கா இதழுக்கு எழுதிய கடிதத்தின் நகல் மற்றும் தமிழாக்கம்.**



மதிப்பிற்குரிய ஜனாப் சையத் அஹமத் லத்தீஃபி சாஹிப் M.A., அவர்களுக்கு ஸலாம்களுடன்....

இன்று தங்களின் தர்கா பத்திரிக்கை கிடைக்கப் பெற்றோம். படித்து மிக்க மகிழ்ச்சியானது. மஜ்லிஸ் உலமாயி அஹ்லிஸ் ஸுன்னத்தி வல் ஜமாஅத்தில் ஆலி ஜனாப் சையத் வஜீஹுன்னகி சக்காப் சாஹெப் அவர்கள் செயலாளராக தேர்ந்தெடுக்கப் பட்டத்தை அறிந்தோம். இந்த மகிழ்ச்சியான தருணத்தில் எங்களின் மற்றும் எங்கள் மதரஸா பேராசிரியர்கள், மாணவர்கள் அனைவர்களின் முபாரக்கான நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்...

# சண்டாளன் எஜீதை ஏன் வெறுக்க வேண்டும்...?

## காஃபிராகிப் போன எஜிதின் கருப்பு அத்தியாயம்...

**நபிகளாரின் முன்னறிவிப்பு...**

நபிகள் கோமான் பெருமானார் இந்த பொன்மொழியை கூறியதாக ஹதீதுகலை நிபுணர்களில் இமாம் அபுபக்கர் இப்னே ஷைபான் தன் ஹதீது கிரந்தந்திலும், இமாம் அபு யாலா தன்னுடைய மஸ்னத் கிரந்தத்திலும், இமாம் அஹமத் பின் ஹுஸைன் பைஹகீ தன்னுடைய தலாயினுன் நுபுவத்திலும், ஹாபிஸ் இப்னே ஹஜ்ரத் அஸ்கலானி தன்னுடைய மத்தாலிபுல் அபியாவிலும், இமாம் ஷஹாபுத்தீன் அஹமத் இப்னே ஹஜ்ரத் மக்கி ஹைத்தமி தன்னுடைய ஸவாயிகுல் முஹர்ரிக்கா கிரந்தந்திலும், அல்லாமா இப்னே கசீர் அவர்கள் அல் பிதாயது வன் நிஹாயாவிலும், இமாம் ஜலாலுத்தீன் ஸுயூத்தி அவர்கள் தாரிகுல் குலஃபாவிலும், கீழ்கண்ட ஹதீஸ் ரிவாயத்தை சையிதினா அபூ உபாதா இப்னே ஜர்ரா ரஜியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகள் கோமான் கூறியதாக ரிவாயத்து செய்கிறார்கள்.

என்னுடைய உம்மத்தின் வருங்காலம் நீதி நேர்மையுடன் நிலைத்திருக்கும். எதுவரையென்றால் அதில் முதன் முதலில் குழப்பம் விளைவிப்பவன் பனீ உமைய்யா கோத்திரத்தில் ஒருவன் ஆவான் அவனை எஜீத் என்ற பெயருடன் மக்கள் அறிவர்.

மற்றொரு ஹதீஸில் இமாம் ஷஹாபுத்தீன் இப்னு ஹஜ்ரத் மக்கி ஹைத்தமி அவர்கள் தம் கிரந்தத்தில் இந்த ஹதீஸை பதிவு செய்கிறார்கள்.

ஹஜ்ரத் அபுதர்தா ரஜியல்லாஹு அன்ஹு அவர்கள் ரிவாயத் செய்கிறார்கள் நபிகள் கோமான் கண்மணி நாயகம் அவர்கள் கூறினார்கள். என்னுடைய சுன்னத்தான வழிமுறையை முதன் முதலில் மாற்றுபவன் பனீ உமைய்யா கோத்திரத்தை சேர்ந்த ஒருவன் ஆவான். அவனை எஜீத் என்று எல்லோரும் கூறுவர்.

**யஜீதின் கருப்பு அத்தியாயம்...**

பெருமானாரின் இரண்டு ஹதீதுகளை மட்டும் எஜீதின் கேடுகெட்டதனத்திற்கு ஆதாரமாய் பார்த்தோம். இப்போது வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடும் கருப்பு அத்தியாத்தை பாருங்கள்.

1. எஜீது தன்னுடைய அராபிய கவிதையில் இப்படி கூறுகிறான். எஜீதே உன்னுடைய ரப்பாகிய படைத்தவன் (குரானில்) மது அருந்துபவனுக்கு கேடுகள் வந்து சேரட்டும் என்று எங்கும் கூறவில்லை. ஆனால் தொழுகையாளி மீது சாபம் உண்டாவதாக என்று கூறியுள்ளான். (நவூதுபில்லாஹ்)

**ஆதாரம் :- தாகே காமில்...**

2. மற்றொரு கவிதையில் நான் முன்னாள் சமுகத்தாரை பார்த்தேன். மது அருந்துவது ஹலால் ஆகுமானதாகவே காண்கிறேன். **ஆதாரம் :- தஜ்கிரத்துல் கவாஸ் வல் உம்மா...**

பன்றியின் கறி தான் ஹராம் அதன் மற்ற உறுப்புகளை சாப்பிடலாம் என்று கூறிய இன்றைய எஜீதுகளான தவ்ஹீதுவாதிகள் உங்கள் நினைவுக்கு வந்தால் மொழி பெயர்ப்பாளர் பொறுப்பல்ல...

3. மறுமை நாளில் மீண்டும் எழுப்பப்படுவோம் என்று ஈமான் கொள்ளச் சொல்லுவது உலக வாழ்க்கையில் மனதை சோர்வடைய கூடிய தவறான கட்டுக் கதைகளாகும். **ஆதாரம் : தஜ்கிரத்துல் கவ்வாஸ் வல் உம்மா..**

4. முஸ்லிம் சமூகமே, கற்பனை செய்யக் கூட அஞ்சும் பெருமானாரின் புனித துணைவியார்கள் முஸ்லிம் சமூகத்தின் தாய்களாக கருதப்படுவதால் பெருமானாருக்கு பின் அவர்களுடன் நிக்காஹ் என்பது ஹராமாக பட்ட ஒன்றாகும். ஆனால் எஜீத் அன்னை ஆயிஷா சித்திக்கா அவர்களுடன் நிக்கா செய்யும் எண்ணம் கொண்டிருந்தான்.

**ஆதாரம்:- கிர்தாரே எஜீத்...**

5. எஜீது மற்றொரு ஈரடி கவிதையில் சொல்லுகின்றான். பனீ ஹாஷிம் குலத்தார் (ரஸூலுல்லாஹ்வின் குடும்பத்தாரான இமாம் ஹுசைன் வம்சத்தினர்) என்னிடமிருந்து ஆட்சியை கைப்பற்ற ஓர் அரசியல் நாடகம் அரங்கேற்றினர். இத்தனைக்கும் அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்கு எந்த வஹீயும் இறங்கவில்லை. **ஆதாரம் :- தஜ்கிரத்துல் கவ்வாஸ் வல் உம்மா...**

(சண்டாளன் எஜீதின் இந்த கூற்றை தான் இன்றைய தேவ்பந்திய, தப்லிகிய, PEACE வஹ்ஹாபிகள் புனிதமாக நடந்த உலகின் முதல் இஸ்லாமிய தியாக முஹர்ரம் ஷஹாதத்தை அரசியல் போர் என்பதாக எஜீது அரைத்த மாவையே அண்டா அண்டாவாக அரைக்கிறார்கள் என்பது கண்கூடு)

**கொலைபாதகன் எஜீத்...**

இன்றைய வஹ்ஹாபிய கூட்டத்தார் எஜீதுக்கு வக்காலத்து வாங்குவதாக நினைத்துக் கொண்டு இமாமே ஆலி முகாம் கண்மணி நாயகத்தின் கிளைக் கொழுந்து, சொர்க்கத்து இளைஞர்களின் கோமகனார் ஸையிதினா இமாம் ஹுசைன் அவர்களை எஜீது படுகொலை செய்ய சொல்லவில்லை. ஆனால் இப்னு ஜியாதுதான் படுகொலை செய்தான் என்று எஜீதை காப்பாற்ற முயற்சிக்கிறார்கள்.

ஆனால் இபுனே ஜியாத் நான் இமாம் ஹுசைனை ஷஹீதாக்கவில்லை எஜீது தான் கொலை செய்ய உத்தரவிட்டான் என்ற உண்மையை போட்டு உடைத்து தேவ்பந்து வஹ்ஹாபிகளின் முகத்தில் கறி பூசுவதை பாருங்கள்.

அல்லாமா இபுனே ஸாகி தன்னுடைய தாரிகே காமில் என்ற வரலாற்று நூலில் இந்த கூற்றை ஆதாரப்படுத்துகிறார்கள்.

“இமாம் ஹுசைனை நான் ஏன் ஷஹீத் செய்தேன் என்றால், சண்டாளன் எஜீது அவரை கொலை செய்யும்படி ஆணை பிறப்பித்தான். அப்படி இல்லையெனில். நான் உன்னை கொலை செய்து விடுவேன் என எஜீது என்னை மிரட்டினான். எனவே தான் நான் இமாம் ஹுசைனை ஷஹீதாக்கினேன்.”

**ஆதாரம் :- தாரிகே காமில்...**

7. இரண்டாம் கலிஃபாவாகிய ஹஜ்ரத் உமர் ரஜியல்லாஹு அன்ஹு அவர்களின் புதல்வராகிய ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் ரஜியல்லாஹு அன்ஹு அவர்கள் எஜீதைப் பற்றி கூறுகிறார்கள்.

**“குரங்குகளை ஆடவைத்து மகிழ்பவனும் நாய்களுடன் விளையாடுபவன், மது அருந்துபவன், வெளிப்படையாக தீய செயல்களை செய்பவனுடனும், நாங்கள் பைஅத் செய்ய ஏற்றுக் கொண்டால், மறுமைநாளில் அல்லாஹ்வின் திருமுன் நாம் என்ன பதில் சொல்வோம்” ஆதாரம் :- தாரிகே யாகூபி...**

**காபிஃபிராகிப் போன எஜீத்...**

8. சட்ட மாமேதைகளான நான்கு இமாம்களில் ஒருவரான இமாம் அஹமத் பின் ஹம்பல் ரஜியல்லாஹு அன்ஹு அவர்கள் யஜீதை காஃபிராகிப் போனான் என்று ஃபத்வா வழங்கியுள்ளார்கள். அதை இமாம் இபுனு ஜௌஸியும் சரி கண்டார்கள். இன்னும் பல அறிஞர் பெருமக்களும் அதை ஆதரித்து இருக்கிறார்கள் என்பதாக ஹஜ்ரத் ஷைகு முஹம்மது இப்னே அலி அஸ்ஸபா அவர்கள் தன்னுடைய நூலான அஸ்ஸாஃபுர் ராகிபைனில் குறிப்பிடுக்கிறார்கள்.

சண்டாளன் எஜீதைப் பற்றி இன்னும் ஆயிரக்கனக்கான கீழ்த்தர மான செயல்கள் பதிவாகியுள்ளன. விரிவுக்கு அஞ்சி சுருக்கி ஆதாரப்படுத்தியுள்ளோம்.

எனவே எஜீதுக்கு வக்காளத்து வாங்குவோர் எப்படிப்பட்டவராக இருப்பர் என்பதை பொது மக்கள் புரிந்து கொள்ளவும். எல்லாம் வல்ல அல்லாஹ், தன்னுடைய ஹபீபும் மஹபூபுமாகிய கண்மணி நாயகம் ரஸூலே கரீம் அவர்களின் வம்சத்து நாயகரான இமாம் ஹுசைனாரின் பொருட்டால் இம்மையிலும், மறுமை யிலும் இன்றைய யஜீதுகளிடமிருந்து காப்பாற்றுவானாக. ஆமீன்! யாரப்பல் ஆலமீன்!

**நன்றி : கன்ஜுல் ஈமான்,**
**உருது மாத இதழ், டெல்லி.**

ماہنامہ؛ کنزالایمان۔ دہلی کو شکریہ کے ساتھ

# பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பெற்றோர்கள் தூய முஃமின்களே...!

ஆக்கம் : அப்ஜலுல் உலமா குளம் ஜமால் முஹம்மது சூஃபி -காயல் பதி

**ஆட்சேபனை 4**

தம் தாயாருக்காக பாவமன்னிப்பு கேட்க இறைவனிடம் பெருமானார் அனுமதி கேட்ட போது அல்லாஹ் மறுத்துவிட்டான். அவர்கள் காபிர்களாக இருந்ததால் தானே அல்லாஹ் மறுத்தான். (நவூதுபில்லாஹி மின் ஜாலிக்)

**தெளிவான பதில் :**

1) என் தாயாருக்காக பாவமன்னிப்பு தேடுவதற்காக எனதிரைவனிடம் அனுமதி கேட்டேன். எனக்கு அனுமதி தரவில்லை. எனது தாயாரின் கப்ரை தரிசிக்க அனுமதி வேண்டினேன். இறைவன் எனக்கு அனுமதி தந்தான். **அறிவிப்பாளர் : ஹஜ்ரத் அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு.**

நபியே உமது தாயார் அவர்களுக்கு பாவமன்னிப்புத் தேட வேண்டாம். அதற்கு அவசியமில்லை. ஏனெனில் அவர்கள் ஜெயம் பெற்ற சுவர்க்கவாசிகள் என்பதால் அவன் அனுமதி கொடுக்க வில்லை. **ஆதாரம் : தப்ஸீர் மித்ரம், தப்ஸீர் ஜமல்.**

ஆனால் அவர்கள் கப்ரை ஜியாரத் செய்ய அனுமதியளித்திருக்கிறான்; எனும் போது அன்னை ஆமினா அவர்கள் உண்மை முஸ்லிம்களாக இருந்தார்கள் என்பது தெளிவாக விளங்கும். ஏனெனில்.

(நபியே அவர்களில்) யாருடைய கப்ருக்கு அருகிலும் நிற்காதீர்கள்! நிச்சயமாக அவர்கள் இறைவனையும், அவனின் திருத்தூதரையும் மறுத்துவிட்டார்கள். - **அல்குர்ஆன் 9:84**

என்ற ஆயத்து இறை மறுப்பாளர்களின் கப்ருக்கருகில் கூட நிற்க அனுமதிக்கவில்லை. ஆனால் ஆமினா நாயகி அவர்கள் முஃமினாக இருந்ததால்தான் அவர்களின் கப்ரை ஜியாரத் செய்ய அனுமதி கொடுக்கப்பட்டது என்பது தெளிவாகிறது.

2) ஒரு கிராம வாசி இறைத்தூதர் அவர்களிடம் வந்து யாரஸுலல்லாஹ்! எனது தந்தை எங்கே? எனக் கேட்க, அவர்கள் அவர் நரகத்திலுள்ளார் என்றதும், உங்கள் தந்தை எங்கே? என்று அந்த கிராமவாசி கேட்டதும், எனது தந்தையும் உமது தந்தையும் நரகில் உள்ளனர் என்று நபிகளார் கூறினார்கள். இதை ஹஜ்ரத் அனஸ் அவர்கள் அறிவிப்பதாக முஸ்லிம், அபூ தாவூத் கிரந்தங்களில் காணக்கிடக்கிறதே! என்று கேட்கப்பட்டால்...

இந்த அறிவிப்பில் வரும் அறிவிப்பாளர்கள் ஒன்றுப்படவில்லை. இதனை அறிவிப்பு செய்பவரான ஹம்மாது பின் ஸலமா அவர்கள் ஹஜ்ரத் தாபித், ஹஜ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்றதாகக் கூறுகின்றனர்.

இவரை (ஹம்மாதைப் பற்றியும், அவர் அறிவிப்புகள் பற்றியும் பலவிதமான கருத்துக்களை காண முடிகிறது. இமாம் புகாரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், இவர் மனன சக்தி அற்றவராக இருந்ததின் காரணமாக இவரின் அறிவிப்புகளுக்கு தமது நூலில் இடமளிக்கவில்லை. **நூல் : தஹ்ஃதீபுத் தஹ்ஃதீப், ஆசிரியர் : இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்**

ஆனால் இதே ஹதீதை முஃமர் அவர்கள் தாபித் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடமிருந்து கிடைத்ததாகக் கூறுகின்றார். இந்த ஹதீதில் எனதும், உனதும் தகப்பன் நரகிலே எனக் கூறியதாக குறிப்பிடவேயில்லை. மாறாக, பொதுவாக காபிர்களின் கபுரருகில் செல்வீர்களாயின் நரகத்தைக் கொண்டு எச்சரிக்கை செய்யுங்கள் எனக் கூறியதாகவே குறிப்பிடுகிறார்.

ஹஜ்ரத் முஃமர் அவர்களை ஏற்றுக் கொண்டதாலேயே இமாம் புகாரி அவர்களும், இமாம் முஸ்லிம் போன்றோரும் தமது கிரந்தங்களில் இவ்வகீதுகளை பதிவு செய்துள்ளனர்.

இந்த முஃமர் அவர்களின் கூற்றுக்கு ஒத்ததாக கிடைத்த மற்றொரு ஹதீது, ஒரு கிராமவாசி நபிகளார் அவர்களின் திருச்சபைக்கு ஆஜராகி என் தந்தை எங்கே? எனக் கேட்டார். பெருமானார் அவர்கள் நரகில் என்றார்கள். மீண்டும் அவ்வரபி உங்கள் தப்பன் எங்கே? எனக் கேட்க, நீ காபிர்களின் கப்ரருகில் சென்றால் நரகிற்கு சொந்தமானவர்கள் எனக் கூறும்படியாக சொன்னார்கள். **அறிவிப்பாளர் : ஹஜ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள். நூற்கள் : தப்ரானீ, பைஹகி.**

அக் கிராமவாசி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாகவும், இமாம் பைஹகீ அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஒரு வாதத்திற்காக நபிமொழியில் கூறப்பட்டுள்ள இன்ன அபீ என் தந்தையும் என்று கூறியதாக இருந்தாலும், அது அபூலஹப் பெருமானாரின் பெரிய தந்தை தானே தவிர அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்ல. ஏனெனில் பெருமானார் அவர்கள் அபூ லஹ்பையும் அபீ என்றே அழைத்து வந்தார்கள். **நூல் : நஜாது ஆபாயின்னபிய்யில் அத்ஹார் பக்கம் 136**

எவ்வாறு நோக்கினும் இவர்களின் ஆட்சேபனைகள் வீணானதாகியே விடுகிறது.

**ஆட்சேபணை 5**

மத்ஹபுக்குரிய இமாமான இமாம் அபூ ஹனீஃபா ரலியல்லாஹு அன்ஹீ அவர்கள் தனது ஃபிக்ஹுல் அக்பர் எனும் நூலில் பெருமானாரின் பெற்றோர்கள் குஃப்ரில் மரணமடைந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்களே! என்றால்,

**தெளிவான பதில்**

ஃபிக்ஹுல் அக்பர் எனும் நூலில் வழிகேடர்கள் இடைச் சொருகல்கள் நிறைய செய்திருக்கிறார்கள். அதில் பெருமானாரின் பெற்றோர்கள் குப்ரில் மரணித்தார்கள் என்ற வார்த்தையும் ஒன்று. அசலான பிக்ஹுல் அக்பர் நூலில் இவ்வார்த்தைகள் இடம் பெறவில்லை. ஒரு தெளிவான சான்றில்லாமல் குப்ரின் மீது ஃபத்வா கொடுக்க முடியாது.

ஒரு வாதத்திற்காக, அந்த வழிகேடர்கள் சொல்வது போல் இருப்பதாக ஒப்புக் கொண்டாலும், அந்நூலில் மாதா அலல் - குஃப்ரி என்றுதான் எழுதப்பட்டுள்ளது. இதற்கு பொருள், குஃப்ருடைய காலகட்டத்தில் மரணமடைந்தார்கள் அதாவது காலத்தைக் குறிக்கும் சொல்லாகத்தான் இச் சொல் அமைந்துள்ளது.

ஆளைக் குறிக்கும் சொல்லாக இருப்பின் மாதா காஃபிரய்னி எனறுதான் இருக்க வேண்டும், அவ்வாறில்லை எனும் போது இவர்களின் ஆட்சேபணை அர்த்தமற்றதாகிவிடுகிறது.

## முடிவுரை

நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறுவதைப் பாருங்கள்: எனது ரப்பிடம் என் குடும்பத்தினர் எவரையும் நரகில் நுழைபிக்கக் கூடாது என்று கேட்டேன்.
அவன் அதை ஒப்புக் கொண்டான்.

மேலும் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்த ஹதீது, நபிகளாரின் திருப்பொருத்தங்களில் அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் எவரும் நரகில் நுழையக் கூடாது என்பதும், ஒன்றாகும்.

**ஆதாரம் : இமாம் இப்னு ஜரீர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் தப்ஸீர்**

அனைத்து நபிமார்களுடைய பெற்றோர்களும் முஃமினானவர்களாகவே இருந்துள்ளனர் என ஷைகு அப்துல் ஹக் முஹத்திஸ் தெஹ்லவி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஆக, உங்கள் முன் வைக்கப்பட்டிருக்கும் குர்ஆன், ஹதீது ஆதாரங்களாலும், வழிகேடர்கள் செய்துவரும் ஆட்சேபணைகளுக்கும் தெளிவான பதில்களாலும் பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பெற்றோர்கள் காபிரல்ல, அவர்கள் உண்மையாக தூய முஃமின்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. உயிர்த்தெழச் செய்து கலிமா சொல்லிக் கொடுத்து உம்மத்தே முஹம்மதிய்யாவில் இணைந்திருப்பதால் அவர்கள் இருவரும் ஸஹாபிகள் எனும் அந்தஸ்தையும் பெறுகிறார்கள் என்பதும் நிருபிக்கப்பட்டு விட்டது. அல்ஹம்துலில்லாஹ்!

சாதாரணமாக ஒருவனைப் பார்த்து உனது பெற்றோர் அநியாயக்காரர்கள் என்று சொல்லுவோமானால், அவனுக்கு மன வேதனை உண்டாகி, மிகக் கோபம் ஏற்பட்டு அவ்வாறு சொன்னவனை உண்டுஇல்லை என்று பண்ணிவிடுவான் என்பது உலகியல் நடைமுறை.

உலகை உய்விக்க வந்த உத்தமரான பெருமானார் அவர்களின் பெற்றோர்களைப் பார்த்து ஒருவன் இல்லாத ஒன்றை சொல்வானானால்,

பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மனது எவ்வளவு வேதனைப்படும்.

அன்னவர்களை வேதனைப் படுத்துபவர்களைப் பற்றி வல்ல இறைவன் தனது திருமறையில்,

அல்லாஹ்வின் தூதர் அவர்களை எவர்கள் துன்புறுத்துகிறார்களே அவர்களுக்கு நோவினை தரும் வேதனையுண்டு **அல் குர்ஆன் 9: 61**

அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நிச்சயமாக நோவினை செய்பவர்கள் அவர்களை உலகத்திலும், மறுமையிலும் அல்லாஹ் சபிக்கிறான். இன்னும், அவர்களுக்கு இழிவுதரும் வேதனையை தயார் செய்து வைத்துள்ளான். **அல்குர்ஆன் 33:57**

என்று தெளிவாகக் கூறுகிறான். இறைவனின் திருப் பொருத்தத்தை பெற வேண்டுமாயின் நபிகளாரின் திருப்பொருத் தத்தை பெற்றுக் கொள்வது அவசியம். அன்னாரின் பெற்றோர்களை தரக்குறை வாக, கண்ணியம் குறைவாக பேசுவது அன்னவர்களை நோவினை செய்வதாகும், அவர்களை நோவினை செய்தால் அத்திருப் பொருத்தம் நமக்கு கிடைக்குமா?

அல்லாஹ் நம்மனைவர்களையும் நபி பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை கண்ணியப்படுத்துவது கொண்டு நமக்கு அன்னாரின் திருப்பொருத்தத்தையும், அதைக் கொண்டு அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தையும் தந்தருள்வானாக! ஆமீன் யா ரப்பல் ஆலமீன்! பி ஜாஹே சையிதுல் முர்ஸலீன்!

# அரேபிய தேசத்தில் புனித தர்காக்களின் ஜியாரத் பயணம்...!

அல்லாஹ்வின் அருளும், ரஸுலின் ரஹ்மத்தும், வலிமார்களின் வஸீலத்தும் நம் அனைவர் மீதும் உண்டாவதாக!

திசைமாறி சென்று கொண்டிருக்கும் இஸ்லாமிய சமுதாயத்தை நல்வழிப் படுத்தி நல்லதொரு வழியான வலிமார்களின் வழியில் அழைத்துச் செல்லும் தர்கா இதழ் ஆசிரியருக்கு ஸலாம்களுடன், துபாய் நிருபர் ஃபாரிஸ் அஹ்மத் கான் எழுதிக் கொண்டது.

கடந்த பக்ரீத் பெருநாள் அன்று எங்கள் அனைவருக்கும், நீண்ட விடுமுறை கிடைத்தது. இந்த விடுமுறையை வீணாக கழிக்காமல் பயனுள்ளதாக கழிக்க எண்ணி நமது ஆசார் பெரிய கலீஃபாவாகிய இரட்டை மஸ்தான் சஜ்ஜாதா நிஷீன் அவர்கள் தீர்மானித்து ஜியாரத் பயணம் மேற்கொண்டார்கள். அதன் சுருக்கத்தை அரேபிய ஜியாரத் பயணக் குறிப்பாக தொகுத்தளித்திருக்கிறேன்.

பயணம் தொடர்கிறது. வீட்டில் இருந்து அதிகாலை 4 மணியளவில் ஆசார் சாஹெப் குடும்பத்தாருடன் பயணம் தொடர்ந்தது. எங்களுடன் தஞ்சை ஜனாப் நஜீர் பாய் அவர்களும் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டார்கள். மொத்தம் இரண்டு வண்டிகளாக துபாயிலிருந்து ஓமன் நோக்கி சென்றது எங்களது பயணம்.

முதல் நாள் முழுவதும் எங்கள் பயணம் தொடர்ந்தது. இரவு 7மணியளவில் ஓமனைச் சென்று அடைந்தோம். அங்கு நமது மரியாதைக்குரிய ஆலி ஜனாப் ஹுஸைனி சாஹிப் அவர்கள் வீட்டை சென்றடைந்தோம். அறுசுவையான இரவு உணவு முடிந்தது. ஓமனில் தங்கும் ஏற்பாடுகளை ஆலி ஜனாப் முஅஜ்ஜம் ஹுஸைனி அவர்கள் செய்தார்கள்.

மறுநாள் காலை சாஹெபின் தலைமையில் அதிகாலை ஹஜ்ரத் அய்யூப் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் பள்ளியில் ஃபஜர் தொழுகை ஒன்றாக தொழுதோம்.

ஆச்சரியம் என்னவெனில் பத்தி கொளுத்துவதை மிகவும் வன்முறையாக எதிர்க்கும் வஹ்ஹாபிகளுக்கு பதிலடியாய் அங்கு கண்ட காட்சி இருந்தது. அதாவது ஹஜ்ரத் அய்யூப் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் தர்கா ஷரீஃபில் ஜியாரத் செய்யும் போது மக்கள் பத்தி கொளுத்தி, போர்வை போர்த்துவதையும் கண்டோம். (ஆதாரம் : புகைப்படம் காண்க)

வாசகர்கள் கவனிக்க வேண்டியது இது நடப்பது இந்தியாவில் இல்லை. அரேபிய நாடான ஓமனில் அரேபிய சுல்தான் ஆளும் நாட்டில் அரசு மரியாதையுடன் அரேபிய அரசின் ஒப்புதலுடன் எவ்வித தடையும் இன்றி நடக்கும் தினசரி நிகழ்வு இது.

கேடுகெட்ட வஹ்ஹாபிகள் இந்தியாவில் பொய் மூட்டைகளை அவிழ்த்து வருகிறார்கள் என்பதை உணர முடிந்தது.

அடுத்து ஹஜ்ரத் முஹம்மத் பின் அரேபியா அவர்களின் ஜியாரத். இதுவும் அதே இடத்தில் சற்று தொலைவில் ஹஜ்ரத் அவர்களின் மஜார் ஷரீஃப் உள்ளது அதையும் முறைப்படி ஜியாரத் செய்தோம்.

காலை உணவு - சிறிய இடைவேளைக்குப் பின்னால் ஹஜ்ரத் ஹுத் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் ஜியாரத். இதுவும் ஓமனில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள தர்காஷரீஃப் ஆகும்.

இது அரசே கட்டிடம் கட்டிக் கொடுத்து பராமரித்து வரும் தர்கா ஷரீஃப்.

மதிய உணவுவிற்குப் பிறது ஹஜ்ரத் இம்ரான் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் ஜியாரத்திற்குச் சென்றோம். மாலை நேரம் மக்கள் கூட்டம் மிக அதிகமாக இருந்தது.



**ஹஜ்ரத் அய்யூப் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் தர்கா ஷரீஃப் - நாடு ஓமன்**

ஹஜ்ரத் அவர்களை ஜியாரத் செய்யும் முன் எல்லோரும் செய்யும் முதல் வேளை அங்கு பத்தி கொளுத்துவதையும், மஜார் ஷரீஃபை தொட்டு முத்தமிடுவதையும் காண முடிந்தது.

ஹஜ்ரத் சாலெஹ் நபி அவர்களின் ஒட்டகத்தின் பாதம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் பதிந்த பாதையை ஜியாரத் செய்யும் போது அங்கு நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்திய காட்சி என்னவெனில் இங்கு இன்றும் அந்த பாதையின் சுவடு மறையாமல் இருக்கிறது.

மேலும் அங்கு உள்ள ஓமானிய மக்கள் கூறியதாவது ;

இங்கு இந்த ஒட்டகத்தின் பாதம் இருப்பது முன்பு யாருக்கும் தெரியாது. ஒரு நாள் இவ்வூர் தலைவரின் கனவில் பெரியவர் போல் உள்ள ஒருவர் வந்து இங்கு சாலெஹ் நபியவர்களின் ஒட்டகையின் பாதச் சுவடு உள்ளது எனக் கூற, அதற்கு ஹஜ்ரத் அவர்களே! நான் இந்த ஊரின் தலைவன் மட்டும் தான் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. இது சுல்தானின் ஆட்சி நடக்கும் நாடு எனவே இச்செய்தியை சுல்தானிடம் கூறவும் என தலைவர் அவர்கள் பதிலளிக்க,

மறுநாள் சுல்தானின் கனவில் தோன்றிய அப்பெரியவர் அவர்கள் அவ்விஷயத்தை கூறிய போது சுல்தானும் அதன்படி ஒட்டகத்தின் பாதம் உள்ள இடத்தில் அனைவரும் ஜியாரத்து செய்யும் விதமாக கட்டிடம் கட்டிக் கொடுத்து மக்கள் பயணம் செய்ய வழிவகுத்து வசதியான சாலை அமைத்துக் கொடுத்தார்கள்.

மறுநாள் காலையிலேயே நமது ஜியாரத் பயணம் தொடர்ந்தது. காலையில் ஹஜ்ரத் முஹம்மத் பின் அலீ அவர்களின் தர்கா ஜியாரத்து செய்தோம்.

நபிகள் நாயகம் காலத்தில் வாழ்ந்த ஹஜ்ரத் ஓர் சஹாபி அவர்களின் ஜியாரத் இது. ஓமனில் உள்ள பள்ளிவாசலினுள் அமைக்கப் பட்டுள்ள மஜாரி ஷெரீஃப்புகளுக்கு நடுவில் ஹஜ்ரத் அவர்களின் தர்கா ஷரீஃப் உள்ளது.

இனிதாக பயணம் முடியும் தருவாயில் மேலும் மகிழ்ச்சி கலந்த ஆச்சரியமான செய்தி. ஹஜ்ரத் யூனுஸ் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் மஜார் ஷரீஃப் கண்டெடுக்கப்பட்டுள்ளது என கேள்விப்பட்டு அங்கும் சென்று ஜியாரத் செய்தோம்.

இதற்கிடையில் கேரளத்து மன்னர் சேரமான் பெருமாள் இஸ்லாத்தை ஏற்று சஹாபியாகி (ஹஜ்ரத் தாஜுத்தீன்) திரும்புகையில் வஃபத்தான இடத்தில் அவர்களின் மஜார் ஷரீஃப் உள்ளது. அந்த தர்கா ஷரீஃபையும் ஜியாரத் செய்யும் பாக்கியம் கிடைத்தது.

இவ்வாறு அனைத்து தர்காக்களிலும், இந்தியாவில் தர்காக்களில் வழக்கமாக நடைபெறுவதைப் போல் நறுமணமான பத்தியை கொளுத்துவதும், மஜார் ஷரீப்புகளின் மீது கண்ணிப்படுத்தும் விதமாக போர்வை போர்த்துவதும், மஜார் ஷரீஃபை தொட்டு முத்தமிட்டு கண்களில் ஒத்திக் கொள்வதும், பூ - சந்தனம், தப்ருக் பெறுவதும் அரேபிய அரசு அனுமதியுடன் நடக்கும் விஷயங்களாகும்.

அரேபிய நாட்டில் தர்காக்கள் கிடையாது! அரேபியர்கள் ஜியாரத் செய்வது கிடையாது! என்று கோயபல்ஸ் கூப்பாடு போடும் வஹ்ஹாபியக் கூட்டத்தார்கள் பேச்சைக் கேட்காதீர்கள் என்று தர்கா இதழ் வாசகர்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

தவறான பாதையில் கண்மூடித் தனமாக செல்லும் இந்த வஹ்ஹாபியர்களிடம் இருந்து விலகி நிற்க இந்த தர்கா ஜியாரத்து நமக்கு பயனுள்ளதாக இருந்தது. அல்லாஹ் வல்ல வலிமார்களின் வஸீலாவால் காத்தருள் வானாக ஆமீன்!

**நமது வாசக நிருபர் : பாரிஸ் அஹ்மத் கான் - உடுமலை Campதுபாய்**

# உலகில் சாந்தி, சமாதானம், சகோதரத்துவம், மனித நேயம் வேண்டி மஹா பாத யாத்திரை!

**இலக்கை நோக்கி தனியாகப் புறப்பட்டேன்...!**

**மக்கள் ஒன்றன் பின் ஒன்றாக பயணித்தார்கள்...!**




***தலைமை :***

ஆந்திர மாநிலம் அனந்தபூர் மாவட்டத்தில் உள்ள பெனுகுண்டா ஷரீஃபில் அடங்கி இருக்கும் இறை நேசர் ஹஜ்ரத் சையிதினா பாபா ஃபக்ருத்தீன் அல் ஹஸனி வல் ஹுஸைனி சுஹ்ரவர்த்தி கன்ஜுல் இஸ்ரார், காஹே மஸ்த், காஹே ஹோஷியார். பாதுஷாஹே ஸீஸ்தான் வ ஷஹ்பூர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தர்காவின் **சதர் ஸஜ்ஜாதா நிஷீன் ஹஜ்ரத் காஜா சையத் ஷா ருக்னுத்தீன் அஹ்மத் ஹுஸைனி என்கிற தாஜ் பாபா ஸுஹ்ரவர்த்தி மத்தஜில்லாஹுல் ஆலி** அவர்கள் தலைமை ஏற்று இன்ஷா அல்லாஹ் ஹிஜ்ரி 1432 முஹர்ரம் பிறை 14 ஆங்கில வருடம் 21, டிசம்பர் 2010 செய்வாய்கிழமை காலை 10.00மணிக்கு பெனுகொண்டா தர்கா ஷரீஃபில் இருந்து புக்ராக்கள், மஷாயிகீன்கள் கலீஃபாக்கள், முரீதீன்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் சேர்ந்து சமுதாய ஒற்றுமை, தேசப்பற்று, மனித நேயம், ஆகியவற்றை நிலை நாட்ட பாத யாத்திரையாக புறப்பட்டு திருச்சிராப்பள்ளியில் அடங்கியுள்ள இறை நேசர் ஹஜ்ரத் காஜா சையத் ஷா நத்ஹருத்தீன் தப்லே ஆலம் பாதுஷா தோஷ்ல் சமந்தர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் சன்னிதானத்தில் ஜியாரத் செய்து கிலாஃப் எனும் போர்வை போர்த்தி, துஆ என்னும் பிரார்த்தனை செய்வார்கள்.

***பாத யாத்திரை செல்லும் வழிகள்...***

பெனுகொண்டாவில் இருந்து புறப்பட்டு, பால் சமந்தரம் கிராஸ், கத்ரி, கல்சர்லா, குரம்குண்டா, மதனப்பள்ளி, பலம்னேர், கிருஷ்ணகிரி, மங்கலம், தருமபுரி, சேலம், நாமக்கல் வழியாக திருச்சி வந்தடைவார்கள்.

மேலும் விரிவான ஆலோசனைகளுக்கு கைபேசி எண்களில் தொடர்பு கொள்ளவும். 09440243724, 09491674455, 9493949786

FAKHRIA CHARITABLE TRUST, பெனுகொண்டா ஷரீஃப், அனந்தபூர் மாவட்டம், ஹுஸைனி யுனைடேட் முஸ்லிம் டிரஸ்ட், சேர்லபள்ளி மண்டலம், குரம்கொண்டா, ஜில்லா சித்தூர்.

***குறிப்பு :***

பாதயாத்திரையில் கலந்து கொள்வோருக்கு ஐவேளை தொழுகை மற்றும் தியானங்களுடன் இருவேளை உணவு, சிற்றுண்டி, தேனீர் மற்றும் மருத்துவ வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**தகவல் : ஆலி ஜனாப் பிஸ்மில்லாஹ் அலீ ஷா - கோம்பூர் தர்கா ஷரீஃப் தர்மபுரி மாவட்டம்.**

## கான்காஹே ஆலியா

### பதாயூன் ஷரீஃப் -U.P



**உத்திரப்பிரதேச மாநிலம் புனித பதாயூன் நகரில் காதிரிய்யா தர்காவின் கந்தூரி விழா சீரோடும், சிறப்போடும், தாஜ்தாரே அஹ்லே சுன்னத் அவர்களின் தலைமையில் திருமறையின் தெளிவுரை, மாநபியின் மகத்துவ கீதங்கள், முஹ்யித்தீன் ஆண்டகையின் மேன்மைக் குரிய சிறப்புகளை விளக்கி மூன்று நாட்கள் பல்லாயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்தில் புனிதத்துடன் நடந்தேறியது.**

**கான்காயே ஆலியா காதிரியாவைப் பற்றி விளக்கமாக இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் காண்க...**

*ரஜப் பிறை 18 ஹிஜ்ரி 1430 - 12 ஜுலை 2009 அன்று சவூதிய மன்னர் அப்துல்லாஹ் கண்மணி நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் புனித ரவ்ளா ஷரீஃப் முன்பு இரு கரங்களை ஏந்தி துஆ செய்யும் காட்சி. வளைதள முகவரி...*

http://www.youtube.com/watch?v=YyC3AcjoCks&feature=player_embedded



**ரஸுலுல்லாஹ்வின் ரவ்ளா ஷரீஃபிர்க்கு முன் ஒரே ஒரு முறை ஹஜ்ஜுக்குச் செல்லும் ஹாஜிமார்களை கையேந்தி துஆ கேட்பதை அடித்துத் தடுக்கும் சவூதிய வஹ்ஹாபிய முதவ்வாக்கள் சவூதி மன்னரே ஜியாரத்து செய்து கையேந்தி துஆ செய்வதை ஏன் தடுக்கவில்லை? ஷிர்க் பித்அத் என கரடியாய் கத்தும் நம் உள்ளூர் தவ்ஹீதிகள் இதற்கு என்ன முரட்டு ஃபத்வா கொடுக்குமோ...?**